L185:4:6
31N3
100618

உ

கடவுள் துணை

கண்வைத்திய மென்னும்

# ருநேத்திர சிந்தாமணி

இஃது

மூலிகை மர்மம், விஷ வைத்திய சிந்தாமணி, சுகந்த பரிமள சாஸ்திரம், கனக சாஸ்திரம், இங்கிலீஷ் தமிழ் வைத்திய சிகாமணி முதலிய நூல்களின் ஆசிரியராகிய ஆயுர்வேத வைத்தியர்

சிறுமணவூர்

முனிசாமி முதலியார் அவர்களால்

இயற்றப்பட்டது.

இரண்டாம் பதிப்பு

சென்னை :

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

வெளியிட்டது.

பதிப்புரிமை] 1953 [விலை ரு. 1.

100618

L 1853426
31K3

# அட்டவணை


| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| நேத்திர நோய் தோற்றுமிடங்களும் தொகையும் | .... | 1 |
| ..ரண்ணூற்ருறுவிதமான நேத்திர ரோகங்கள் வருவதற்குக் காரணம் | .... | 2 |
| ..தகாசத்தின் குணம் | .... | ,, |
| ..த்தகாசத்தின் குணம் | .... | 4 |
| ..காசத்தின் குணம் | .... | 5 |
| ..ராளிகாசத்தின் குணம் | .... | 6 |
| ..மரிகாசத்தின் குணம் | .... | 7 |
| ..ர்ப்பாச்சலின் குணம் | .... | 8 |
| அன்னகோபம் அல்லது அனல்கோபக் குணம் | .... | 9 |
| ..ாயவெரிக் குணம் | .... | 10 |
| ..ண்புகைச்சலின் குணம் | .... | 11 |
| ..திமந்தத்தின் குணம் | .... | 13 |
| ..ற்பரோகத்தின் குணம் | .... | 14 |
| ..ஜலகும்பத்தின் குணம் | .... | 15 |
| ..ல்லத்தின் குணம் | .... | 16 |
| ..செவ்வேர்க் குணம் | .... | 17 |
| ..பருவணிகைக் குணம் | .... | ,, |
| ..படலத்தின் நிவர்த்தி | .... | 18 |
| ..வண்மாசுப் படலத்தின் குணம் | .... | 19 |
| ..மாலைக்கண்ணின் குணம் | .... | 20 |
| விழிமுழுங்கிக் குணம் | .... | 22 |

| | | |
|---|---|---|
| மாலைக்காசத்தின் குணம் | .... | 23 |
| மணிவளர்த்திக் குணம் | .... | ,, |
| மர்தாரகாசத்தின் குணம் | .... | 25 |
| உளைவுகண்ணின் குணம் | .... | 26 |
| ஒட்டுக்கண் குணம் | .... | 27 |
| மலங்கண்ணின் குணம் | .... | ,, |
| வாதசுக்கில உழவிற்கு மருந்து | .... | 28 |
| சுருங்குகண்ணின் குணம் | .... | |
| கண்கட்டிக்கு மருந்து | .... | |
| முடமயிருக்கு | .... | |
| இருண்டகண்ணுக்கு | .... | |
| இரத்தப் பாச்சலுக்கு | .... | |
| கண்ணெரிவுக்கு | .... | |
| கொம்படிப்பட்ட கண்வேதனைக்கும், கோரைப் பட்டதிற்கும் மருந்து | .... | |
| கண்ணில் புழுவெட்டுக்கும், புண்ணுக்கும் | .... | |
| கண்பூவுக்கு | .... | |
| பூவெள்ளெழுத்துக்கு | .... | |
| ஆணிப்பூவுக்கு | .... | |
| அதிமாங்கிஷ வளர்த்திக்கும், பூபடலத்திற்கும் | .... | |
| பூபடலத்திற்கு | .... | |
| முளை ஆணிப்பூவுக்கு | .... | |
| பூபடலம், காசத்திற்கு | .... | |
| குக்தத்திற்கு | .... | |
| குக்தம், அமரத்திற்கு | .... | |
| இழிக்கண்ணுக்கு— | .... | |
| விழிகண் குருடு | .... | |
| கண்வலி மணிவளர்த்தி ஆணிக்கு | .... | |
| வெக்கடுப்பு, குர்தம், அமரம், கண்வலி | .... | |





| | | |
|---|---|---|
| கண் வலிக்கு | .... | 41 |
| சுக்கிரப்படுவனுக்கு | .... | ,, |
| இழிகண்ணுக்கும், புழுவெட்டுக்கும் | .... | 42 |
| நேத்திரத்தில் நெருப்புப்பட்ட புண்ணுக்கு | .... | ,, |
| அக்காம் புழுவெட்டிற்கு | .... | ,, |
| கண்பிரிதல் புழுவெட்டிற்கு | .... | ,, |
| நீர்வடிதலுக்கு | .... | 43 |
| அந்தக்கண்ணிற்கு | .... | ,, |
| அமாம் பிரிதற்கண்ணிற்கு | .... | ,, |
| மெளிருக்கு | .... | 44 |
| வாணம், சுக்கிலம், படலம், குந்தம் | .... | ,, |
| அழிகண்ணிற்கு | .... | 45 |
| கண் புண்ணிற்கு | .... | ,, |
| நேத்திர வாயுவுக்கு | .... | ,, |
| நேத்திரவாயு, மண்டையிடிக்குத் தைலம் | .... | 46 |
| ஒளிமயங்க வெளிமயக்கத்திற்கு | .... | 47 |
| கண்ணில் நீரேற்றத்திற்கு | .... | ,, |
| சூடுவளிர்த்திக்கு | .... | ,, |
| கண் கூச்சத்திற்கு | .... | 48 |
| இமைத்தடிப்பு கரிப்புக்கு | .... | ,, |
| கண்சிவப்பு நீர்வடிதலுக்கு | .... | ,, |
| கண்சிவப்பு, கடுப்பு, பூப்படலத்திற்கு | .... | 49 |
| வெள்ளெழுத்துக்கு வெண்ணெய் | .... | ,, |
| வெள்ளெழுத்து, குருட்டுக்கண் முதலான கண் ரோகங்களுக்கும், உடம்பு வலிக்கும் தைலம் | .... | 50 |
| மாலைக்கண், வெள்ளெழுத்து, புகைச்சலுக்கு | .... | 51 |
| நீலகாசம், பித்தகாசம், மந்தகாசம், படலம், பில்லம், மயிர்க்குத்தல், புழுவெட்டு, மாலைக் | | |

கண், நீர்வடிதல், குந்தம், நேத்திரவாயு முதலானவைகளுக்கு .... 52
கண்வலி, சிகப்பு, கடுப்பு, தினவு, நீர்வடிதலுக்கு .... „
கண்வலி, வெக்கடுப்பு, நேத்திர வாய்விற்கு .... 54
விழிவேதனை படலத்துக்குப் புறவளையம் .... 55
விழிவீக்கம், எரிவு, தினவு, படலம், சிவப்பு, கடுப்பு, நீர்வடிதலுக்குப் புறவளையம் .... „
மேற்படி வியாதிகட்கு ஒத்தணம் .... 56
மேற்படி வியாதிகட்கு இமையின் மேலிடும் பஞ்சு .... „
மேற்படி வியாதிகட்குத் தாரை, புறவளையம் .... 57
கண்ரோகங்களுக்கு மாத்திரை .... „
கண்ரோகங்களுக்குப் பொடி .... 61
கண்ரோகங்களுக்குக் குழம்பு .... 64
கண்ரோகங்களுக்கு மை .... 65
கண்ரோகங்களுக்கு விழியிற்கட்ட நெய் .... 67
கண்ரோகமுடையவர்களுக்குத் தலைக்கு பதமிடக் குங்குமப்பூ தைலம் .... 70
கண்ரோகமுடையவர்களுக்கு காலில் தேய்க்கத் தைலம் .... 71
விழியில் வியாதி வராமலிருப்பதற்கும், குளிர்ச்சிக்கும் வெண்ணெய் .... „
விழிநோய்கட்கு மருந்தரைக்கும் பாத்திரம் .... „
விழியில் மருந்திடப் பொருந்தாக் காலம் .... 72
விழியில் மருந்தெழுதியபின் நடக்கவேண்டிய கிரமம் .... „
தந்தசுத்தி .... „
தைலம் தேய்த்துக்கொள்ளும் கிரமம் .... 73



கண்ரோகங்களுக்குத் தைலம் .... 73
அவயவங்களின் எரிவிற்கும், பித்தத்திற்கும் ிதலம் .... 85
விழிகடுப்பு, தலைவலிக்குத் தைலம் .... 86
விழி ரோகங்களுக்கும், கபால குஷ்டத்திற்கும் குமரித் தைலம் .... „
கபாலவலி, கபாலஜன்னி, கண்ணோய்கட்கு சம்பீரத் தைலம் .... „
ண்ணோய், செவிநோய், தலைநோய்கட்குத் தைலம் .... 87
ழிநோய், சிரசுநோய்கட்கு கற்பூர சந்தனாதித் தைலம் .... „
த்தம், விழி, காதடைப்பு, மந்தத்திற்கு தைலம் .... 88
நத்திர நோய் தொண்ணூற்றாறுக்கும் தைலம் .... „
ழிநோய், சிரசு நோய்கட்கு தைலம் .... 89
ிரத்தினாதி மாத்திரை .... „

---

# திருமந்திர சிந்தாமணி

## நேத்திர நோய் தோற்றுமிடங்களும் தொகையும்

ாத கோபத்தால் கருவிழியினிடத்து - 45
லேத்தும கோபத்தால் வெள்ளை விழியினிடத்து - 20
த்த கோபத்தால் இமையின் ஓரத்தில் - 16
டைக்கண்ணில் பிறக்கிற வியாதிகள் - 15,
ஆக வியாதி - 96 என்றறிக.

இவைகளின் விவரம்:

| | | |
|---|---|---|
| ாதகாசம் | செவ்வோ் | கண்கட்டி |
| த்தகாசம் | பருவனிகை | முடமயிர் |
| சத்துமகாசம் | படலம் | இருண்டகண் |
| லகாசம் | வெண்மாசு | இரத்தப்பாய்ச்சல் |
| ரொளிகாசம் | மாலைக்கண் | கண்ணெறிவு |
| துமரிகாசம் | விழிமுழுங்கி | புழுவெட்டு |
| ீர்பாய்ச்சல் | மாலைகாசம் | கண்பூவு |
| ுனல்கோபம் | மணிவளர்த்தி | வெள்ளெழுத்து |
| காசவெரி | மந்தாரகாசம் | ஆணிப்பூ |
| கண்புகைச்சல் | உளைவுகண் | அதிமாங்கிஷம் |
| மந்தம் | ஒட்டுக்கண் | பூபடலம் |
| ப்ரோகம் | மலங்குகண் | முளையாணி |
| ஜலகும்பம் | சுக்கிலம் | குந்தம் |
| ில்லம் | சுருங்குகண் | இழிகண் |

| | | |
|---|---|---|
| விழிகண்குருடு | நேத்திரவாய்வு | செஞ்சுடர் |
| கண்வலி | சுடுவளர்த்தி | எழுச்சி |
| வெக்கடுப்பு | கண்சிவப்பு | கண் உலைவு |
| அழிகண் | அமரம் | |
| கண்புண் | அக்கரம் | |

மற்றவை தொந்தரோகம் என்றறிக.

---

## தொண்ணூற்றாறு விதமான நேத்திர ரோகங்கள் வருவதற்குக் காரணம்

மாதர்மயக்கம் அதாவது, அதிக ஸ்திரீபோகததாலும், மூலத்தில் அக்கினி யதிகரிப்பதாலும், மேகநீராலும், மலக்கட்டினாலும், கபால வரட்சியினாலும் அப்பியங்கஸ்தானம் தவறுதலாலும், சதா விசனத்தினாலும், கடூர வெய்யிலில் நடப்பதாலும், அளவுமீறி சுமை சுமப்பதாலும், மழையிலும் காற்றிலும் நீடித்து சஞ்சரிப்பதாலும், தாம்பூலம் அடக்கி சயனிப்பதாலும் எழுத்து சித்திரம் தீபம் இவைகளை இடைவிடாது பார்வையிடுவதாலும், மேற்கூறிய தொண்ணூற்றாறு விதமான நேத்திர ரோகங்கள் சம்பவிக்குமென்றறிக

### வாதகாசத்தின் குணம்

[கண்வீங்கிக் கடுத்து நீர்வடியும், நித்திரை சற்றும் வராது.]

### இதற்கு நிவர்த்தி

நற்சீரகம் ஒரு சிறங்கை
நத்தைச்சதை ஒரு எலுமிச்சங்காயளவு
குருக அரிந்த ஈருள்ளி கால்படி.



இம்மூன்றும் உரலிலிட்டு சிதைத்து ஒருபடி பசும் நெய்யில் போட்டுக்காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு சிறுபூளை யென்கிற மூலிகையின் சாற்றை 3 - 4 - துளிகள் கண்ணிற்பிழிந்து அதன்பிறகு மேல்படி நெய்யை கண்ணிற்கட்டி ஸ்நானம் செய்துவரவும்.

### இதுவுமது

முள்ளி - நீலி - முருங்கை - இவைகளின் பூவை வகைக்கு ஒரேயிடையாய் நிறுத்தெடுத்து பசும்பால் விட்டரைத்து அதற்குப்பிறகு நெய் செய்யும் தேனும் கூட்டி களிம்புபோல் மத்தித்து வைத்துக்கொண்டு கண்ணில் தீட்டி வருவதாலும், வாதகாசம் நிவர்த்தியாகும்.

### இதுவுமது -

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | படி | 2 |
| நெருஞ்சிச்சாறு | ,, | ½ |
| முலைப்பால் | ,, | ½ |
| பசும்பால் | ,, | ½ |

மேற்கூறிய அளவுபோல யாவும் ஒன்றாய்க்கலந்து வைத்துக்கொண்டு சித்தாமுட்டிவேர் - கொன்றைமரத்துப்பிசினி - அதிமதுரம் - விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் - கொத்தமல்லி - செஞ்சந்தனம் - கோஷ்டம் - ஏலம் - கல்நார் - சிறுகீரைவேர் வகைக்கு 1 - பலம் எடுத்து யிடித்து 8 - படி தண்ணீரில் போட்டு அடுப்பிலேற்றி 2 - படி கஷாயமாக வற்றக் காய்ச்சி யிருத்து வடிகட்டி மேற்கூட்டி வைத்திருக்கும் நல்லெண்ணெய் முதலிய வஸ்துவுடன் கலந்துகொண்டு பிறகு சடாமாஞ்சி - சாஸ்திரபேதி வகைக்கு 1 - பலம் எடுத்து

பசும்நெய் விட்டு மைபோல் அறைத்து அத்துடன் கலந்து அடுப்பேற்றி தைலபதமாய்க் காய்ச்சி வடித்து ஸ்நானஞ்செய்து வந்தால் வாதகாசம் தீரும்.

---

## பித்தகாச குணம்

[வெள்ளை விழியில் வெண்மேகம்போல் நீர்படர்ந்து கருப்பு முழியில் பாதி உளுந்துப் பிரமாணம் வெண்மையாய்த் தோற்றும்.]

இதற்கு நிவர்த்தி

| | |
|---|---|
| சங்கு | அதிமதுரம் |
| சுக்கு | புங்கம்வித்து |
| திப்பிலி | பீதரோகணி |
| மிளகு | துத்தம் |
| அரிதாரம் | மனோசிலை |

இவைகளை சமனிடையாய் நிறுத்தெடுத்து நந்தியாவட்டைப் பூச்சாற்றால் அறைத்து கயறுபோல் திரித்து நிழலிலுணர்த்தி வைத்துக்கொண்டு, அன்றாடம் தேனிலிழைத்துக் கண்ணில் தீட்டி வரவேண்டியது. அப்படி தீட்டி வரும்போது இடையில் 4-நாளைக்கொருமுறை அடியிற்சொல்லும் தயிலத்தினால் ஸ்நானஞ்செய்து வரவேண்டியது.

தைலம்

| | | |
|---|---|---|
| சித்தாமுட்டி | பலம் | 10 |
| முசுமுசுக்கைசமூலம் | ,, | 10 |
| குரும்பை | ,, | 10 |
| சீந்திற்கொடி | ,, | 10 |
| உத்தாமணி | ,, | 10 |



மேற்கூறிய இடைபோல் நிறுத்தெடுத்து கல்லுரலில் போட்டுச் சிதைத்து 10-படி தண்ணீரில் போட்டு 2-படியாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி யெடுத்து அத்துடன் ஏலம் - அதிமதுரம் - செண்பகப்பூ - செவியம் - கோஷ்டம் - மஞ்சிட்டி - லவுங்கம் வகைக்கு 3 - விராகனெடை யெடுத்து பசும்பால் விட்டறைத்து ஷெ கிஷாயத்துடன் போட்டு 1-படி நல்லெண்ணெய் விட்டு யாவும் ஒன்றாய்க் கலந்து அடுப்பேற்றி தைலபதமாய்க் காய்ச்சி வடித்து மூழ்கிவரவும்; பித்தகாசம் தீரும்.

---

## நீல்காசத்தின் குணம்

[கண்சோதியை யடுத்துச் சற்று சுணங்குபோல் வெளுரிக்காணும், பாசிபோல் நீர்படர்ந்து ஒளி மங்கும்.]

இதற்கு நிவர்த்தி

| | |
|---|---|
| வெண்காரம் | பவளம் |
| துத்தம் | பீங்கான் ஓடு |
| துருசு | பச்சைகற்பூரம் |
| சாரணைவேர் | சாஸ்திரபேதி |

இவைகள் யாவும் சமனிடை யெடுத்து மாதுளம்பூ சாற்றால் அறைத்து கயறுபோல் உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, முலைப்பாலில் இழைத்து கண்ணில் தீட்டிவரவும்; அப்படி தீட்டும்போது அடியில் சொல்லியிருக்கும் தைலத்தினால் தலைமுழுகிவரவும்.

### தைலம்

| | | |
|---|---|---|
| பாதிரிச்சாறு | படி | ¼ |
| முசுமுசுக்கைச்சாறு | ,, | ¼ |
| பருத்திச்சாறு | ,, | ¼ |
| செங்குன்றிச்சாறு | ,, | ¼ |
| முடக்கொத்தான்சாறு | ,, | ¼ |
| நல்லெண்ணெய் | ,, | 1 |

இவையாவும் ஒன்றாய்க் கலந்து அத்துடன் ஏலம் - கோஷ்டம் - தான்றிமல்லி - சடாமாஞ்சி வகைக்கு கால் பலம் எடுத்து பசும்பால் விட்டரைத்து முன் கலந்து வைத்திருப்பதுடன் போட்டு அடுப்பேற்றி தைலபதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவரவும்.

---

## நீரொளிகாசத்தின் குணம்

[கண்ணில் ஜலங்கோர்த்துக் கொண்டு கருவிழியின் அடியில் பூப்போல் தோன்றித் தீப்பொரி போல் ஒளிவிடும்.]

### இதற்கு நிவர்த்தி

குங்குமப்பூவை எலுமிச்சம்பழச் சார்விட்டு மத்தித்து தேன்விட்டு குழம்புபோலரைத்து கண்ணில் தீட்டிவரவும்; அப்படி தீட்டிவரும்போது அடியிற் சொல்லிய தைலத்தினால் ஸ்நானஞ்செய்து வரவும்.

### தைலம்

ஆனைத்திப்பிலி - அதிமதுரம் - தக்கோலம் - வெள்ளிலோத்திரம் - சுக்கு - திரிபலை வகைக்கு 1-பலம் எடுத்து



பசும்பாலில் அரைத்து 1-படி பசும் நெய்யிற் கலக்கி அடுப்பேற்றிக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

---

## குமரிகாசத்தின் குணம்

[கண்வீங்கிக் கடுப்பும் வலியுங் காணும். அடிக்கடி பீளைகட்டும்.]

### இதற்கு நிவர்த்தி

| | |
|---|---|
| துருசு | சங்கு |
| துத்தம் | மிளகு |
| புங்கன்வித்து | மஞ்சள் |
| இந்துப்பு | பீதரோகணி |

இதுகள் வகைக்கு 1-விராகனெடை யெடுத்து ஆவின்பால் விட்டரைத்து 16-விராகனெடை பசும் நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்து புட்டியில் வைத்துக்கொண்டு, கண்களில் துளி துளியாய் விட்டுக் கொண்டு வரவும்; அடியிற்சொன்ன தைலத்தினால் தலைமுழுகிவரவும்.

### தைலம்

| | | |
|---|---|---|
| பசும்நெய் | படி | 1 |
| ஈருள்ளிச்சாறு | ,, | 1 |

இவையிரண்டும் ஒன்றாய் கலந்துக்கொண்டு இத்துடன் செங்கழுநீர்க்கிழங்கு - சீந்தில்தண்டு - ஏலம் - மல்லி - விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் - சண்பகப்பூ - நெல்லிவற்றல் வகைக்குப் பலம் கால் எடுத்து ஆவின் பால் விட்டரைத்துப் போட்டுக் கலக்கி தைலபதமாய்க் காய்ச்சி வடித்து தலைமுழுகவும்.

---

## நீர்ப்பார்சலின் குணம்

[விழிநொந்து சிவந்து அனல்போல் எரியும், அருவிபோல் நீர்வடியும், தினவெடுக்கும்.]

இதற்கு நிவர்த்தி

| | |
|---|---|
| குதிரைப்பல் | கத்தாழைவேர் |
| துருசு | சங்கு |
| துத்தம் | மிளகு |

மேற்கூறிய குதிரைப்பல் முதலாய் சங்குமட்டில் 5 - தினுசும் வகைக்கு ஒரு விராகனெடையும், மிளகு கால் விராகனெடையும் எடுத்து இவை யாவையும் முலைப்பால் விட்டறைத்து குழம்புபதமாய் வழித்து சிமிளில் வைத்துக்கொண்டு, பிரதிதினம் காலையில் கண்ணில் தீட்டி வரவும்; அடியில் சொல்லிய தைலத்தினல் தலைமுழுகி வரவும்.

### தைலம்

| | |
|---|---|
| கரிசலாங்கண்ணிச்சாறு | கருவாழைகிழங்குசாறு |
| உத்தாமணிச் சாறு | மணித்தக்காளிசாறு |
| தைவேளைச்சாறு | நந்தியாவட்டைச்சாறு |

இவைகளின் சாறு வகைக்குப் படி ¼, பசும் நெய் படி ½, நல்லெண்ணெய் படி - 1 இவையாவும் ஒன்ருய்க் கலந்து வைத்துக்கொண்டு,

| | |
|---|---|
| வெட்டிவேர் | மஞ்சிட்டி |
| விலாமிச்சம்வேர் | சதகுப்பை |
| அதிமதுரம் | சடாமாஞ்சி |
| கோஷ்டம் | கச்சோலம் |
| சந்தனம் | வசுவாசி |
| தாணிக்காய் | இந்துப்பு |



இவை 12 - தினுசுகளில் வெட்டிவேர் விலாமிச்சம் வேர் இவ்விரண்டும் வகைக்குப் பலம் - 1, மற்ற யாவையும் வகைக்கு 1¼ - விராகனெடையாக யெடுத்து பசும் பால் விட்டறைத்து முன் கலந்திருப்பதுடன் போட்டுக் கலக்கி அடுப்பேற்றி தைலபதமாய்க் காய்ச்சி வடித்து தலைமுழுகி வரவும், கண்ணில் நீர்வடிதல், அனல்போலெரிதல், தினவெடுத்தல் யாவும் நிவர்த்தியாகும்.

---

## அன்னகோபம் அல்லது அனல் கோபக் குணம்

[விழி நொந்து சிவந்து வலித்துப் புடைத்து தீப் பொறிபோல் எரிந்து நீர் வடியும்.]

இதற்கு நிவர்த்தி

மாதுளம்பூ - மாதுளங்காய் - பச்சைகற்பூரம் இம் மூன்றும் சமனிடையாய் நிறுத்தெடுத்து முலைப்பால் விட்டுச் சிதைத்து மெல்லிய சீலையில் முடிந்து கண்களில் ஒன்று இரண்டு துளிகளாய்ப் பிழிந்துவரவும்; அடியிற் சொல்லிய தைலத்தினல் தலைமுழுகி வரவும்.

### தைலம்

முலைப்பால் நல்லெண்ணெய் வகைக்குப் படி 1 - செண்பகப்பூ - கோஷ்டம் - ஏலம் - அதிமதுரம் - கோரைக்கிழங்கு - விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் சந்தனம் வகைக்குப் பலம் - ¼ எடுத்து முலைப்பால் விட்டரைத்து யாவும் ஒன்ருய்க் கலந்து தைலபதமாகக் காய்ச்சி தலைமுழுகிவரவும்.

## வேறு முறை

கற்றாழஞ்சாறு - நெல்லிக்காய்ச்சாறு - நல்லெண்ணெய் வகைக்குப்படி - 1, இம்மூன்றும் ஒன்றாய்க் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சி தைலபதமாய் குருகி வரும்போது பச்சைகற்பூரம் - புனுகுசட்டம் - சந்தனம் - ஜாதிக்காய் வகைக்கு 1½ - விராகனெடையாக வெடுத்துப் பொடித்துப் போட்டுக் கலக்கி வடித்து வைத்துக் கொண்டு தலைமுழுகி வரவும்; அனல் கோபத்தினாலுண்டான வலித்தல் - புடைத்தல் - நீர்வடிதல் - நோதல் யாவுந் தீரும்.

---

## காசவெளிச் சூரணம்

[எழுத்தைப் பார்த்தபின் மனிதரைப் பார்த்தால் இருட்போல் தோற்றும்.]

### இதற்கு நிவர்த்தி

| | |
|---|---|
| வாலுழுவையரிசி | பீதரோகணி |
| குங்குமப்பூ | லவுங்கப்பத்திரி |
| கிராம்பு | செண்பகப்பூ |
| பச்சைகற்பூரம் | வெள்ளைச்சாரணை வேர் |
| சந்தனம் | வெள்ளிப்பொடி |

வெள்ளிப்பொடி மாத்திரம் ½-கழஞ்சு, மற்ற ஒன்பது சரக்குகளும் வகைக்கு 1-கழஞ்சு, எடுத்து யாவும் கல்வத்திலிட்டு உயர்ந்த தேன்விட்டு நான்கு ஜாமமரைத்து சிமிழில் வைத்துக்கொண்டு கண்ணில் தீட்டி வரவும். அடியில் சொல்லிய தைலத்தினால் தலை முழுகி வரவும்.



### தைலம்

| | | |
|---|---|---|
| பசும்பால் | படி | 2 |
| பசுந்தயிர் | ,, | 2 |
| நல்லெண்ணெய் | ,, | 2 |

சந்தனம் - தேவதாரம் - பேரீச்சம்பழம் - முந்திரிப் பழம் - காட்டெருமைப்பால் - தாமரைப்பூ - ஏலம் - லவுங்கப்பத்திரி - நெல்லிவற்றல் வகைக்குப் பலம் - 4, பசும்பால்விட்டு மைபோல் அரைத்து யாவும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி தைலபதமாய் வடித்துத் தலைமுழுகி வரவும். காசவெளி - கண்மயக்கம் - பித்தநீர் - தலைவலி இவை தீரும்.

---

## கண்புகைச்சலின் சூரணம்

[கண் மங்கலாயும், பார்க்கும் உருவங்கள் அனேகமாயும் தோற்றும்.]

### இதற்கு நிவர்த்தி

| | | |
|---|---|---|
| தலைமண்டையோடு | விராகனெடை | 6 |
| துத்தம் | ,, | 2¼ |
| இந்துப்பு | ,, | 1¼ |

இவைகளை பனைமட்டைச் சார்விட்டரைத்து கயறு போல் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு வேளை பனைமட்டைச் சாற்றாலிழைத்து மைதீட்டுவதுபோல் கண்ணில் தீட்டிவரத் தீரும். அல்லது,

### கண்புகைச்சலுக்கு வேறு முறை

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழச்சாறு | துளி | 1 |
| நல்லெண்ணெய் | ,, | 1 |
| இலுப்பை அரைப்பு ஊறின தண்ணீர் | ,, | 1 |

இம்மூன்றும் உள்ளங்கையில் விட்டு நன்றாய் மத்தித்து கண்ணிற்போட்டு வரவும். இப்படி 4 - 6 தடவை போட கண்புகைச்சல் மாறும்.

கண்புகைச்சலுக்கு வேறு முறை

| | |
|---|---|
| கடுக்காய் விரைக்குள்ளிருக்கும் பருப்பு | 12 |
| திப்பிலி | 5 |
| மிளகு | 3 |

இவைகளை நெல்லிப்பழச் சாற்றால் அரைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு ஷை சாற்றினாலாவது ஷை வற்றல் ஊறிய தண்ணீரிலாவது இழைத்து கண்ணில் தீட்டி வந்தால் கண் புகைச்சல் தீரும்.

கண்புகைச்சலுக்கு வேறு முறை

பலகறை விராகனெடை - 5, துத்தம் - துருசு - வகைக்கு $\frac{1}{4}$ - விராகனெடை இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து கயறுபோல் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு முலைப்பாலினால் இழைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் கண்புகைச்சல் தீரும்.

கண்புகைச்சலுக்கு வேறு முறை

திப்பிலி - மிளகு - வெள்ளைச்சாரணைவேர் இவைகளை சரியெடையாய் நிறுத்தெடுத்து உத்தாமணிச் சாற்றால் அரைத்து நிழலிலுலர்த்தி குரிஞ்சான்சாற்றால் ஒரு நாளரைத்து அப்படியே நிழலில் உலர்த்தி நந்தியாவட்டைப்பூச் சாற்றால் ஒரு நாளரைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு குளிர்ந்த ஜலத்தினால் இழைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் கண்புகைச்சல் தீரும்.



கண்புகைச்சலுக்குத் தைலம்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | படி | $\frac{1}{4}$ |
| முலைப்பால் | ,, | $\frac{1}{4}$ |
| அதிமதுரம் | விராகனெடை | 1 |
| நற்சீரகம் | ,, | 1 |
| மிளகு | ,, | 1 |
| கற்றாழஞ்சோறு | பாக்களவு | 1 |

முலைப்பாலும் எண்ணெயும் ஒரு பாண்டத்தில் விட்டு மற்ற சரக்குகளை பசும்பால் விட்டு மைபோல் அரைத்துக் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சி வடித்து ஒருநாள்விட்டு ஒருநாள் தலைக்குத்தேய்த்து ஸ்நானஞ் செய்து வரவும். சீக்கராந்துளாவது, பாசிப்பயறாவது அரைப்பிட்டு தேய்த்துக்கொண்டு வெந்நீரினால் முழுக வேண்டும். இப்படி சில தடவைகள் முழுகிவந்தால் கண்புகைச்சல் தீரும்.

கண்புகைச்சலுக்கு வேறு தைலம்

நல்லெண்ணெய் படி - $\frac{1}{2}$, மிளகு - அதிமதுரம் வகைக்குப் பலம் - 1 இவைகளை பசும்பால் விட்டரைத்துக் கலந்து காய்ச்சி முழுகிவந்தால் கண்புகைச்சல் தீரும்.

---

## மதிமந்தத்தின் குணம்

[கண் சிவந்து உறுத்தி வலிக்கும், பீளைசாறும், நீர் வடியும், பார்வை மந்தமாயிருக்கும்.]

இதற்கு நிவர்த்தி

கடல்நுரையும் கற்கண்டும் ஓர் நிறையாய் நிறுத்தெடுத்து தேன்விட்டரைத்து கண்ணில் தீட்டிவரத் தீரும். இதில் தீராவிட்டால்,

### வேறு முறை

சுக்கு - திப்பிலி - மிளகு - மரமஞ்சள் - இந்துப்பு - மனோசிலை இவைகளை சமனெடையாய் நிறுத்தெடுத்து பசும்பால் விட்டறைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு புளிப்பு மாதளம்பழச் சாற்றாலிழைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும். இதிலும் தீராவிட்டால்,

### வேறு முறை

சங்கு - மனோசிலை - சதகுப்பை - இந்துப்பு - கடல் நுரை - மிளகு - செங்கற்பொடி இவைகளை ஓர் நிறையாயெடுத்து எலுமிச்சம்பழச்சார் விட்டறைத்து கயறு போல் உருட்டி வைத்துக்கொண்டு பசும் நெய்யில் இழைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் தீரும்.

இந்த முறைகள் செய்யும்போது அடியில் சொல்லியபடி சிரசில் தளமிட்டு ஸ்நானம் செய்துவர வேண்டியது.

### கண்மந்தம், பித்தம், நீர்பாய்ச்சல் இதுகட்கு முழுக்கு முறை

சந்தனம் - அதிமதுரம் வகைக்குப் பலம் - 1, கற்றாழஞ்சோறு பிடி - 1 இவைகளை ஆவின்பால் விட்டறைத்துக் கொதிக்கவைத்து தலையில் தளமாய் அழுத்தமாய் தேய்த்து ஸ்நானம் செய்துவரவும்.

---

## பற்பரோகத்தின் குணம்

[கண்ணிமையினுள் இரத்தங் கட்டித் திரண்டு இளமாமிசம் போலிருக்கும்.]



### இதற்கு நிவர்த்தி

கண்ணிமையைப் பிதுக்கிக்கொண்டு அதில் சீரகப் பொடியைத் தூவி பேய்ப்பீர்க்கன் இலையில் தேய்த்து இரத்தம் போக்கிவிட்டு புளியம் இலையை யிடித்துச் சாறுபிழிந்து குழம்பு பதமாய்க் காய்ச்சி மூன்று நாள் மட்டும் கண்ணிற் புறவளையமிட்டு, அதன்பிறகு துத்தம் - துருசு - இந்துப்பு - இவைகளை யோர்நிறையா யெடுத்து உப்பிலாங்கொடிச் சாற்றாலரைத்து நிழலில் உலர்த்தி, நெய்யும் தேனும்விட்டு களிம்புபோல் அரைத்துக் கொண்டு கண்ணில் தீட்டிவந்தால் நிவர்த்தியாகும்.

---

## ஜலதப்பத்தின் குணம்

[வெள்ளை விழியில் நீர் கோர்த்து இமை வீங்கிக் கடுத்து வலிக்கும். பீளைகட்டும்.]

### இதற்கு நிவர்த்தி

| | | |
|---|---|---|
| வெள்ளைக்குண்டுமணி பருப்பு | விராகனெடை | 1 |
| ஷை வேர் | ,, | 1 |
| வெள்ளைக்காக்கணம்பூ | ,, | 1 |
| ஷை விரை | ,, | 1 |

இவைகளை முலைப்பால்விட்டு மைபோல் அரைத்து கயறுபோல் உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தேன்விட்டிழைத்து கண்ணில் தீட்டிவரவும். இப்படி தீட்டிவரும்போது அடியிற்சொல்லிய தைலத்தினால் 4 - நாளைக்கொருமுறை தலைமுழுகி வரவும்.

### ஜெலகும்பத்திற்கு தைலம்

ஆடுதீண்டாப்பாளைச்சாறு - ஆவாரைச்சாறு - மணத்தக்காளிச்சாறு - வரிக்கற்றாழைச்சாறு - நல்லெண்ணெய் - பசும்பால் இவைகள் வகைக்குப் படி - 1 இதுகள் யாவும் ஒரு பாண்டத்தில் விட்டு கோஷ்டம் - மட்டிப்பால் - அதிமதுரம் - விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் - ஏலம் வகைக்கு ¼ - பலம் எடுத்து பசும்பால் விட்டறைத்துக் கலக்கி அடுப்பேற்றிக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வந்தால் ஜெலகும்பகுணம் நிவர்த்தியாகும்.

---

### பில்லத்தின் குணம்

[கண்ணிமை புருவம் முழுமையும் நீர்கட்டிக் கொண்டு புடைத்து விம்மியிருக்கும்.]

இதற்கு நிவர்த்தி

கண்ணிமையை உருத்திப் பிடித்துக்கொண்டு ஊசியாற் குத்தி யுரித்துப்போட்டு, ஆவின்பால் - நெய் - நல்லெண்ணெய் இம்மூன்றும் ஒன்றாய்க் கலந்து கறண்டியிற் காய்ச்சிக்கொண்டு, எள்ளைப் பொடி செய்து சீலையில் முடிந்து தோய்த்து தோய்த்து நெற்றி - புருவம் - கன்னம் இவைகளில் ஒத்தணஞ் செய்து, பச்சைகற்பூரத்தைப் பொடித்து நெய்யிற் போட்டு சற்று கொதிக்கவைத்து அதில் துணியை நனைத்து இமையின்பேரில் போட்டுவைத்து, பெருங்காயமும் சீரகமும் பொடித்து நெருப்பில் தூவி புகைக் காட்டவும்.

---



### செவ்வேர்க் குணம்

[கடைக்கண்ணிலிருந்து வெள்ளை விழியெங்கும் செகப்பு நூல்போல் செவ்வரியோடிப் படர்ந்திருக்கும்.]

இதற்கு நிவர்த்தி

மேற்கூறியபடி செவ்வரியோடிப் படர்ந்திருக்கும் மாசியை ஊசியால் திரட்டி யுரித்துப்போட்டு, வெப்பாலைவேரை முலைப்பால் விட்டு பஞ்சுபோல் இடித்து கண்ணில் பிழியத் தீரும்.

---

### பருவணிகைக் குணம்

[கடைக்கண்ணில் சதை வளர்ந்துப் படர்ந்து உறுத்தி வலிக்கும்.]

இதற்கு நிவர்த்தி

ஊசியினல் சதையைத் திரட்டி யுரித்துப் போட்டு அதிமதுரத்தை பஞ்சுபோல் தட்டி பசும்நெய்யிற் போட்டு சிவக்கக் காய்ச்சி கண்ணிற்கட்டி வந்தால் தீரும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| வெண்கலத்தின் அரப்பொடி | துத்தம் |
| தலைமண்டையோடு | இந்துப்பு |

இவைகளை ஓர் நிறையாய் நிறுத்தெடுத்து, எலுமிச்சம்பழச் சாற்றால் மைபோலறைத்து நிழலில் உலர்த்தி அதன்பிறகு பசும்வெண்ணெய் கூட்டி

களிம்புபோல் அறைத்து கண்ணில் தீட்டிவந்தால பருவணிகை, சதைவிருத்தி இவை தீரும்.

---

## படலத்தின் நிவர்த்தி

[வெள்ளை விழியில் பாலாடைபோல் மாசு படர்ந்திருக்கும்.]

மேற்படி பாலாடைபோல் படர்ந்திருக்கும் மாசை ஊசியினால் திரட்டி யுரித்துப்போட்டு இதற்கு முந்திய பருவணிகை நிவர்த்தியில் சொல்லிய அதிமதுர நெய்யைக் கண்ணில் விடத் தீரும். அல்லது,

### வேறு முறை

| | |
|---|---|
| சுக்கு | செஞ்சந்தனம் |
| திப்பிலி | வெள்ளைசாரணைவேர் |
| மிளகு | தாமரைக்கிழங்கு |
| துத்தம் | பச்சைகற்பூரம் |

இவைகளை ஓர் நிறையாய் நிறுத்தெடுத்து முலைப் பால் விட்டரைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, முலைப்பாலால் இழைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் படலதோஷத்தா லுண்டான தோஷம் நிவர்த்தியாகும். அல்லது,

### வேறு முறை

அஞ்சனக்கல் - கோழிமுட்டைத்தோல் - சங்கு - திப்பிலி - சந்தனம் - தலைமண்டையோடு இவைகளை சமனெடை எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் அறைத் துக் கண்ணில் தீட்டிவந்தாலும் சகல படலமும் தீரும்.

---



## வெண்மாசுப் படலத்தின் குணம்

[விழியில் வெண்மாசு படர்ந்து கரகரத்துக் குத்த லெடுக்கும்.]

### இதற்கு நிவர்த்தி

| | |
|---|---|
| சுக்கு | பச்சைகற்பூரம் |
| திப்பிலி | நெல்லிப்பருப்பு |
| மிளகு | செம்புப்பொடி |
| ரோகணி | பளிங்குக்கல் |
| துத்தம் | இரும்புப்பொடி |
| துருசு | மண்டையோடு |
| கடுக்காய்தோல் | பொன்னாங்காணிவேர். |
| சிறுகீரைவேர் | ஒரிலைத்தாமரைவேர் |
| வெட்பூலாவேர் | காக்கணம்வேர் |

இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றால் ஒருநாள், பொன்னாங்காணிச் சாற்றால் ஒருநாள் அறைத்துக் கயறுபோல் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, முலைப்பாலில் இழைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் வெண்மாசு படலத்தாலுண்டான வியாதிகள் நிவர்த்தியாகும். அல்லது,

### வேறு முறை

| | |
|---|---|
| திப்பிலி | துத்தம் |
| மிளகு | ரோகணி |
| சங்கு | பன்றிக்கொம்பு |
| அரிதாரம் | புலிநகம் |
| புங்கம்பருப்பு | ஆமையோடு |
| அதிமதுரம் | சேவல்நெஞ்செலும்பு |
| மனோசிலை | வெள்ளிப்பொடி |

இவைகளை நந்தியாவட்டைப் பூச்சாற்றால் மூன்று நாள் அறைத்துக் கயறுபோல் மாத்திரை யுருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, முலைப்பாலால் இழைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் கண்மாசு, வெண்மாசு, கண்படலம், ஆணிப்பூ இவையாவும் தீரும்.

---

## மாலைக்கண்ணின் குணம்

[மாலை நேரத்தில் இருட்பிடித்ததுபோல் மங்கலாய்க் காணும்.]

### நிவர்த்தி

புளியம்பூ - கிராம்பு - வெள்ளைக்காக்கணம்பூ - ஷை வேர் - துத்தம் - துருசு - நீலரத்தினம் - முத்து - பவளம் - இவை சமனெடை யெடுத்து எலுமிச்சம்பழச் சாற்றால் அறைத்துக் கயறுபோல் உருட்டி வைத்துக்கொண்டு ஷை சாற்றால் இழைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் மாலைக்கண் நிவர்த்தியாகும்.

### மாலைக்கண்ணுக்கு வேறு முறை

வேப்பம் இலையை மைபோல் அறைத்து கோழிப் பித்திற்குக் கவசம் செய்து உமிக்காந்தலில் சொருகி சுட்டு எடுத்து கவசத்தை நீக்கி உள்ளிருப்பதை யெடுத்து தேனிற் குழைத்து உள்ளுக்குக் கொடுத்தால் மாலைக்கண் நிவர்த்தியாகும்.

### மாலைக்கண்ணுக்கு வேறு முறை

கோழிப்பித்தை எடுத்து முன்சொன்னதுபோல் கவசம்செய்து உமிக்காந்தலில் வெதுப்பி யெடுத்து



ஆறியபின் பொடிசெய்து மூன்று நாள் கண்ணில் தூவி வந்தால் மாலைக்கண் குணமாகும்.

### மாலைக்கண்ணுக்கு வேறு முறை

மின்மினிப்பூச்சியும் வெற்றிலையும் கசக்கிக் கண்ணில் பிழிந்து வந்தாலும் மாலைக்கண் குணமாகும்.

### மாலைக்கண்ணுக்கு வேறு முறை

அப்போது உரித்த மருதம்பட்டை - நல்லசீரகம் - ஈருள்ளி இம்மூன்றும் பஞ்சுபோல் இடித்துக் கசக்கி கண்ணில் பிழிந்து வந்தாலும் மாலைக்கண் குணமாகும்.

### மாலைக்கண்ணுக்கு வேறு முறை

இலுப்பைப்பூவாவது, மகிழம்விரையாவது, காட்டாமணக்கன் முத்தாவது, அலிஞ்சி விரையாவது, முலைப்பாலில் இழைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் மாலைக்கண் நிவர்த்தியாகும்.

### மாலைக்கண்ணுக்கு வேறு முறை

பொன்னாவாரை வேரை வெள்ளாட்டுப் பாலில் இழைத்துக் கண்ணில் தீட்டி வந்தாலும் மாலைக்கண் குணமாகும்.

### மாலைக்கண்ணுக்கு வேறு முறை

மின்மினிப்பூச்சி - துருசு - வெள்ளைச்சாரடைவேர் இவைகள் ஓர் நிறையாய் நிறுத்தெடுத்து சதாப்பிலைச் சார் விட்டறைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து

முலைப்பால் விட்டிழைத்துக் கண்ணில் தீட்டிவந்தாலும் மாலைக்கண் குணமாகும்.

---

## விழிமுழுங்கிக் குணம்

[ஒவ்வொரு நேரம் காலை முதல் மத்தியானம் வரையில் தலைமிகுதியாய் அதிர்ந்துக் குடைந்து இடிக்கும்; சிலசமயம் உச்சிமயிரைப் பிடுங்கு வதுபோலிருக்கும்; அப்பால் நாட்செல்லச் செல்லக் கண்ணில் சதை வளர்ந்து மூடும்.}

### இதற்கு நிவர்த்தி

ஷை குணங்கண்டவுடன் மிளகு விராகனெடை-1, உப்புக்கல்-1, தவசி முருங்கையிலை கொட்டைப்பாக் களவு-1 இவைகள் யாவும் சிதைத்துத் துணியில் முடிந்து முலைப்பாலில் ஊரவைத்து ஒரு ஜாமத்திற் கொரு தடவை கண்ணில் பிழியவேண்டியது; இப்படி செய்து வரும்போது,

### தலைக்குத் தளம்

பொன்னாங்காணிச்சாறு - பனைமட்டைச்சாறு - பசும்பால் வகைக்குப் படி-¼ வீதம் கலந்து சிறுகீரை வேர் எலுமிச்சங்காய் பிரமாணம் அரைத்துப் போட்டுக் குழம்பாய்க் காய்ச்சி காலையில் தலைக்குத் தளமிட்டு மாலையில் ஸ்நானம் செய்யவும். இப்படி நாள்விட்டு நாள் செய்யவும். போஜனத்திற்கு பகலில் தயிரும் மாலையில் பசும்பாலும் சேர்க்கவும். இச்சாபத்தியமா யிருக்க நிவர்த்தியாகும்.

---



## மாலைக்காசத்தின் குணம்

[கண் உருத்தி வலிக்கும், கருவிழி சற்றே கலங்கி யிருக்கும், தீபம் வெவ்வேறாய்த் தோற்றும்.]

### இதற்கு நிவர்த்தி

இந்துப்பு - மஞ்சள் - சாரடைவேர் - துத்தம் இவை களை யோர் நிறையா யெடுத்து எலுமிச்சம் பழச் சாற்றால் அரைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு, முலைப்பாலில் இழைத்துக் கண் ணில் தீட்டிவந்தால் நிவர்த்தியாகும்.

---

## மணிவளர்த்திக் குணம்

[கடைக்கண்ணின்கீழ் அல்லது மேலிலாவது எப்போதும் மணிபோல் எழும்புவதும் உடை வதுமா யிருக்கும்.]

### நிவர்த்தி

| | | |
|---|---|---|
| மிளகு | விராகனெடை | ½ |
| செம்புப்பொடி | ,, | ½ |
| தலையோடு | ,, | ½ |
| துத்தம் | ,, | ½ |
| ஓரிலைத்தாமரைவேர் | ,, | ½ |
| பளிங்குக்கல் | ,, | ½ |
| வருத்த துருசு | ,, | 2 |

இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் மூன்றுநாள் அரைத்து செப்புச் சிமிழில்வைத்து மருந்து மறையும் படியாய் ஷை சார்விட்டு மூடிவைத்திருந்து அப்படியே உலர்ந்த பின்பு எடுத்து மறுபடியும் ஷை சாற்றால்

அறைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து முலைப் பாலில் இழைத்து கண்ணில் தீட்டிவந்தால் நிவர்த்தி யாகும்.

மணிவளர்த்திக்கு வேறு முறை

| | | |
|---|---|---|
| சூதம் | விராகனெடை | 1 |
| காரீயம் | ,, | 2 |
| துத்தம் | ,, | 4 |
| சங்கு | ,, | 8 |
| தாம்பிரப்பொடி | ,, | 16 |

இவைகளைப் பழச்சாற்றால் மூன்றுநாள் அறைத்துக் கயறுபோல் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு பசும்பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் நிவர்த்தியாகும்.

வேறு முறை

சித்தாமணக்கின்வேர் மேலிருக்கும் பட்டையை உரித்து ஒரு பலம் நிறுத்தெடுத்து அறைத்து இரண்டு படி தண்ணீர்விட்டு அடுப்பேற்றி நன்றாய் சுண்டும் படியாய் குழம்பாய் காய்ச்சி வடித்துக் கலுவத்தில் விட்டு கடுக்காய்த்தூளும் சர்க்கரையும் சமமாய் எடுத்து அத்துடன் போட்டு மைபோல் அறைத்து அப்படியே காத்தாறியபின் தேன்விட்டுக் களிம்புபோல அறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் நிவர்த்தியாகும்.

வேறு முறை

துத்தத்தை எலுமிச்சம்பழச்சார் விட்டு மூன்று நாளறைத்துக் காத்தாரவைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு



முலைப்பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் நிவர்த்தியாகும்.

மேற்படி பிரயோகங்கள் செய்யும்போது அடியிற் கூறியபடி காலை மாலை செய்யவும்

காலையில் முலைப்பாலில் புளியைக் கறைத்துக் கொதிக்கவைத்துத் துணியிற்கட்டி கண்ணைச்சுற்றியும் ஒத்தணம் செய்து புரவளையல் பூசிவைக்கவும். மாலையில் கடுக்காய்த்தூள் - இந்துப்பு - சர்க்கரை இம்மூன்றும் சமன்கொண்டு கலந்து வெதுப்பித் துணியில் முடிந்து ஒத்தணஞ்செய்து வரவும்.

---

மந்தாரகாசத்தின் குணம்

[கண் சுற்றெல்லாம் வரையுண்டாகி அரிப்பெடுக்கும்; கண் சிவந்து வலிக்கும்; விழி சிறுக்கும்.]

நிவர்த்தி

துத்தம் - துருசு வகைக்கு விராகனெடை - 1, சிறுகீரைவேர் - பொன்னாங்காணிவேர் - ஓரிலைத்தாமரை வேர் இவைகள் வகைக்குப் பாக்களவு; இவைகள் யாவும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் மை போல் அறைத்து காசிபோல் பில்லைகள்செய்து காய வைத்து புதுச்சட்டியில் பரப்பிவைத்து மருசட்டி கொண்டு மூடி அடுப்பேற்றி நான்கு நாழிகையெரித்து பஸ்பமாக்கி சிமிளில் போட்டு வைத்துக்கொண்டு தினந்தோறும் காலையில் எள்ளுப்பிரமாணம் எடுத்துக் கண்ணிலிட்டு வரவும். அடியிற்சொல்லிய தைலத்தினால் நான்குநாளைக்கொருமுறை தலைமுழுகி வரவும்.

### மேற்படி தைலம்

| | | |
|---|---|---|
| கத்தாழஞ்சாறு | படி | 2 |
| உத்தாமணிச்சாறு | ,, | 2 |
| பொன்முசுட்டை | ,, | 2 |
| பருத்திச்சாறு | ,, | 2 |
| பசும்பால் | ,, | 2 |
| நல்லெண்ணெய் | ,, | 2 |

இவைகள் யாவும் ஒன்றாய்க் கலந்து அடுப்பேற்றி வெட்பூலாநெருஞ்சி - விஷ்ணுகாந்தி - விலாமிச்சம் வேர் - வெட்டிவேர் - கோஷ்டம் - கொத்தமல்லி வகைக்குப் பலம் - ¼ இவைகளை பசும்பால் விட்டறைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரவும்.

---

### உளைவுகண்ணின் குணம்

[கண்மணியினுள் எப்போதும் உளைந்து வலிக்கும்.]

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| வெள்ளைக்காக்கணம்வேர் | விராகனெடை | 1 |
| வெண்குன்றிவேர் | ,, | 2 |
| வெள்ளைச்சாரணைவேர் | ,, | 3 |
| மஞ்சள் | ,, | 4 |
| துத்தம் | ,, | 5 |
| துருசு | ,, | 6 |

இவைகள் யாவும் கலுவத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் மூன்றுபகல் அறைத்து நிழலில் ஆரவைத்துக் கபறுபோல் மாத்திரை செய்து முலைப்பாலில் உரைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும்.

---



### ஒட்டுக்கண் குணம்

[கண்ணில் எப்போதும் பீளையும் நீரும் சொரியும்.]

நிவர்த்தி

துத்தம் - துருசு - புளியம் பொருக்குச் சுட்ட சாம்பல் - கடுக்காய் - சுட்டக்கரி இவைகள் யோர் நிறையா யெடுத்து பசும் வெண்ணெய் போட்டறைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் குணமாகும்.

---

### மலங்கண்ணின் குணம்

நிவர்த்தி

[இராக்காலத்தில் கண்ணில் நீர் செம்மிப் பகலில் மலங்கும்.]

சமுத்திராப்பழத்தைச் சுத்திசெய்து கலுவத்தி லிட்டு பசும் வெண்ணெயைக் கூட்டி களிம்புபோல் அறைத்துக் கண்ணில் தீட்டி இதனடியில் சொல்லிய பக்குவத்தைச் செய்து வரவும்.

மேற்படி பக்குவம்

சந்தனம் - குமரிமணி - அதிமதுரம் வகைக்குப் பலம் - 1 இவைகளை கால்படி பசும்பாலில் அறைத்துக் கலக்கிக் குழம்பாய்க் காய்ச்சி காலையில் தலையில் தளமாய்ப் பூசி மாலையில் ஸ்நானம் செய்து வரவும். கண் மங்கல், நீர்பாச்சல், மலங்குகண், பித்தம் இவை தீரும்.

கண்ணுளைவு - கண்சுருங்கல் - ஒட்டுக்கண் - மலங்குகண் முதலான வியாதிகட்கு மாத்திரை

துத்தம் - அயப்பொடி - முத்து - முட்டை அவயத் தோல் - பச்சைகற்பூரம் வகைக்கு விராகனெடை - 1¼,

செம்புப்பொடி விராகனெடை - 2½, பொன் மஞ்சாடி-1, பவளம் - வெள்ளி வகைக்கு கழஞ்சி - ½ இவையாவும் கலுவத்திலிட்டு பழச்சாற்றால் இரண்டு நாள் அரைத்து ஆறியபிறகு, முருங்கைப்பூச் சாற்றால் ஒரு நாள் அரைத்துக் காடிநீரால் ஒருநாளரைத்து கயறுபோல் மாத்திரைசெய்து, தேன் - நெய் - முலைப்பால் - கோசலம் வகைக்குப் படி - ¼ இவையாவும் ஒன்றாய்க் கலந்து நீர் வற்றக் காய்ச்சி வடித்த நெய்யினால் உரைத்துப் போடத் தீரும்.

---

## வாதசுக்கில உரவிற்கு மருந்து

தான்றிக்காய் - நெல்லிக்காய் - கடுக்காய் - தேற்றான்விரை - தாமரைமணி இவையாவும் ஒரு நிறையாயெடுத்து குமரிச்சாற்றால் இரண்டு நாள் அரைத்து உருண்டைசெய்து நிழலில் உலர்ந்தபின் முலைப்பாலில் உரைத்து 21 - நாள் கண்ணில் போட்டு வரவும்.

---

## சுருங்குகண்ணின் குணம்

[குவளை புண்ணாகி நாளுக்கு நாள் கண்சுருங்கி வரும்.]

### நிவர்த்தி

சங்கு - காந்தம் - கடல்நுரை - நன்றாய் சுட்ட செங்கல்பொடி - இந்துப்பு - மனோசிலை - பீதரோகணி - பச்சைகற்பூரம் இவைகள் சமனெடையாய் யெடுத்து நந்தியாவட்டைப் பூச்சாற்றால் மூன்று நாள் அரைத்துக் காத்தாறியபின், பசும் வெண்ணெய் கூட்டி மைபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவர சுருங்குகண் முதலான வியாதி சொஸ்தப்படும்.



---

## கண்கட்டிக்கு மருந்து

நன்னாரிவேர் - விளாவேர் - சங்கன்வேர் - அதிமதுரம் இவைகள் ஓர் நிறையாயெடுத்துக் காடியிற் கலக்கி கரண்டியில் கொதிக்கவைத்து இரும்புத்தடியால் அழுத்தமாய்க் கடைந்து களிம்புபோல் தேய்த்தெடுத்து கண்ணிற் கொஞ்சம் போட்டு கட்டியின் மேலும் பூசிவரத் தீரும்.

---

## முடமயிருக்கு

| | |
|---|---|
| செண்பகப்பூ | விலாமிச்சம்வேர் |
| சந்தனம் | கற்கண்டு |
| சிறுநாகப்பூ | ஜாதிக்காய் |
| சீந்தில்தண்டு | தக்கோலம் |
| வெட்டிவேர் | |

இவைகள் வகைக்கு விராகனெடை - 1¼ எடுத்து பஞ்சுபோல் இடித்து எட்டுபடி தண்ணீரில் போட்டு ஒருபடியாய் வற்றக்காய்ச்சி அதை பீச்சாங்குழையிற் பிடித்துக் கண்ணில் அடித்தால் முடமயிர் உதிரும். இப்படி அந்திசந்தி இருவேளையும், 2 - 3 - நாள் அடிக்கவும். மேற்படி தண்ணீர் கண்ணுக்கு அடிக்கும்போதெல்லாம் அடியிற் சொல்லிய பிரயோகம் செய்யவும்.

அதாவது,

அரிதாரம் - இந்துப்பு - செம்புப்பொடி இவைகள் ஓர் நிறையாயெடுத்துத் துளசிச் சாற்றால் இரண்டு

நாள் அறைத்துக் கயறுபோல் மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு முலைப்பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவரவும். அல்லது,

வேறு முறை

சீனிக்காரம் - துத்தம் - துருசு - மயில்முட்டைத் தோல் - கோழிமுட்டைத்தோல் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்து விபூதிபோல் பஸ்பமாய்ப் பொடித்து மேற்படி தண்ணீர் அடித்தவுடன் எள்ளுப் பிரமாணம் இந்த பொடியைக் கண்ணில் போட்டுவர குணமாகும்.

---

## இருண்டகண்ணுக்கு

நெல்லிவற்றல் - புங்கன்விரை - வெள்ளுள்ளி - சிறுகீரை இவைகள் சமனெடை யெடுத்து மெழுகு போல் அறைத்து உருண்டை செய்து முலைப்பாலில் உறைத்துக் கண்ணிற் போட்டு வந்தால் குணமாகும்.

இருண்டகண்ணுக்கு வேறு முறை

ஆவாரங்கரி - கடுக்காய்கரி வகைக்கு விராகனெடை - 1, துருசு விராகனெடை - ½, எரும்பு விராகனெடை - ⅛, இவைகளை பசும்பால்விட்டு மைபோல் அறைத்துக் குளிகைசெய்து முலைப்பாலில் உறைத்துக் கண்ணில்போட்டு வந்தால் குணமாகும்.

இருண்டகண்ணுக்கு வேறு முறை

துத்தம் - துருசு - வெள்ளைச்சாரணைவேர் வகைக்கு கழஞ்சி - 1 எலுமிச்சம்பழச்சாற்றால் ஒருநாள் அறைத்துக் கயறுபோல் செய்து நிழலில் உலர்த்தி புளியிலைச்



சாற்றிலாவது உறைத்துக் கண்ணில் போட்டு வந்தாலும் குணமாகும்.

---

## இரத்தப் பார்சலுக்கு

தேள்கொடுக்கிலையைக் கசக்கிக் கண்ணில் பிழிந்து வரவும். இப்படி இரண்டொருநாள் செய்து வர சாந்தியாகும்.

---

## கண்ணெரிவுக்கு

மாதுளம்பூ - நற்சீரகம் - நெருஞ்சிக்காய் இவைகளை யோர்நிறையா யெடுத்து பனைமட்டைச் சாற்றால் அறைத்துக் கயறுபோல் மாத்திரைசெய்து முலைப்பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் குணமாகும்.

கண்ணெரிவுக்கு வேறு முறை

செஞ்சந்தனம் - சாஸ்திரபேதி - தேற்றான்விரை இவைகளை யோர் நிறையாயெடுத்து வெண்ணெய்யினாலறைத்து கண்ணிற்குப் புரவளையமிட்டு வந்தால் கண்ணெரிவு தீரும்.

கண்ணெரிவுக்கு வேறு முறை

1-படி பசும்பாலில் 1-பலம் பொன்னாங்காணி வேரை அறைத்துப் போட்டுக் கலக்கிக் காய்ச்சி புரை குத்திக் கடைந்து வெண்ணெய் யெடுத்து அந்த வெண்ணெயை கண்ணில் தீட்டிவந்தால் கண்ணெரிவு தீரும்.

---

## கொம்படிப்பட்ட கண்வேதனைக்கும் கோரைப்பட்டதிற்கும் மருந்து

மண்வெட்டியைக் காயவைத்து அதின்பேரில் முருங்கையிலைச் சாறுவிட்டு கண்ணில் ஆவிபிடித்து உடனே, புளியிலை - துளசியிலை வகைக்கு ஒருபிடி கடுக்காய் - 10 இவைகளை யிடித்து பிட்டவித்து சீலையில் முடிந்து இதில் ஒரு சொட்டுச்சாறு கண்ணில் பிழிந்து முன் வெதுப்பிய சூட்டுடன் கண்ணுக்கு ஒத்தணஞ் செய்யவும். அதன் பிறகு,

அந்தட்சணத்தில் எலுமிச்சம்பழத்தின் மேல் தோலைச் சுட்டக்கரி யெடுத்துக் கலக்கி கொதிக்க வைத்து புரவளையமிட்டு வரவும். அல்லது,

கோழிமுட்டைத்தோல் - வெண்ணைச்சியிலை - திப்பிலி - தேற்றான்விரை - மிளகு இவைகளை ஓர் நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றால் அறைத்து புறவளையமிட்டு வந்தாலும் தீரும். அல்லது

மண்ணாங்கட்டியை பழுக்கக் காய்ச்சி அதில் முலைப்பாலாவது முருங்கிலைச் சாறாவது விட்டு அந்த ஆவியை கண்ணுக்குப் பிடித்து, மேற்படி கட்டியை முலைப்பால் விட்டறைத்து புறவளையமிட்டு வந்தாலும் குணமாகும்.

---

## கண்ணில் பூவெட்டுக்கும் புண்ணாறுக்கும்

துத்தம் - துருசு - வெள்ளைபாஷாணம் இவைகளை ஓர் நிறையாயெடுத்து பொன்னாங்காணிச் சாற்றிலும் சிறுகீரைச் சாற்றிலும் ஒவ்வொருநாள் அறைத்து



வில்லைதட்டிக் காயவைத்து மேற்படி மூலிகையின் வேர்களை விளாங்காய்ப் பிரமாணம் அறைத்து குகை செய்து அதில் மேற்படி வில்லையை வைத்து புளியம் பரணிக்குள் அமைத்து புடம்போட்டுயெடுத்து ஆவின் வெண்ணெயினால் களிம்புபோல் அறைத்து வைத்துக் கொண்டு புருவத்தின்மீது தீட்டிவந்தால் புழுவெட்டு புண் ஆறும்; மயிர் முளைக்கும்.

### புருவமயிர் உதிர்வதற்கு வேறு முறை

ஒரு வெள்ளைச் சீலையில் வெள்ளெருக்கம்பாலை பூட்டியுலர்த்தி இப்படி இரண்டொரு தடவை எருக்கம் பால் ஊட்டி உலர்த்தி திரியாகத் திரித்துக் கலசத்தி விட்டு பசுவெண்ணெய் போட்டு தீபமேற்றி ஊமத்தஞ் சாறுபூசிய அகண்ட சட்டியைக் கவிழ்த்துமூடி மை பற்றியபின், எடுத்து மேற்படி மையை உதிர்த்து விளக்கெண்ணெயில் குழைத்து கண்ணின் புருவத்தில் தீட்டிவந்தால் மயிர் முளைக்கும்.

### வேறு முறை

முத்தெருக்கஞ்செவிமூலத்தை முலைப் பாலில் உறைத்துக் கண்புருவத்தில் தீட்டிவந்தால் புழுவெட்டு மாறி மயிர் முளைக்கும்.

---

## கண்பூவுக்கு

தேள்கொடுக்கிலையும் நந்தியாவட்டைப்பூவும் ஓர் நிறையா யெடுத்துக் கசக்கிக் கண்ணில் இரண்டொரு துளி பிழிந்துவந்தால் கண்பூவு தீரும்.

வேறு முறை

சிறுகீரைவேர் - கடுக்காய் - இந்துப்பு - பழம்புளி இவைகள் ஓர் நிறையா யெடுத்து முலைப்பால் விட்டு இடித்துத் துணியில் முடிந்து நாளொன்றுக்கு மூன்று தடவை கண்ணில் பிழியவும். இப்படி மூன்று நாள் பிழிய கண்பூவு மாறும்.

வேறு முறை

முசுமுசுக்கையிலையும் நற்சீரகமும் ஓர் நிறையா யெடுத்து முலைப்பால் விட்டு சிதைத்து கண்ணில் இரண்டொரு துளி பிழிந்துவரக் கண்பூவு மாறும்.

வேறு முறை

| | |
|---|---|
| பூநாகம் | துருசு |
| காக்கணம்வேர் | துத்தம் |
| சாரணைவேர் | பவளம் |
| செம்புப்பொடி | முத்து |
| இந்துப்பு | பொன் |

இவைகளை ஓர் நிறையாயெடுத்து ஊமத்தஞ்சாற்றால் அறைத்து கயறுபோல் திரட்டி முலைப்பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் ஆணிப்பூவானாலும் மாறிவிடும்.

வேறு முறை

படிகாரத்தை பீங்கானில்விட்டு அது முழுதும்படி எலுமிச்சம்பழச்சாறுவிட்டு வெய்யலில் வைத்து சுண்டியபின் எடுத்து அந்த படிகாரமும் பச்சைகற்பூரமும் சரியெடை கூட்டி முலைப்பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் கண்பூவு மாறும்.

---



## பூவெள்ளெழுத்துக்கு

பீதரோகணி - நற்பவளம் - சாரடைவேர் சமனெடையெடுத்து தண்ணீர்விட் டறைத்துக் கயறுபோல் செய்து உலர்த்தி முலைப்பாலில் உறைத்துக் கண்ணில்போட்டு வந்தால் பூமாறும்; இதை தண்ணீரில் உறைத்துக் கண்ணில் போட்டுவந்தால் வெள்ளெழுத்து மாறும்.

---

## ஆணிப்பூவுக்கு

| | |
|---|---|
| தேற்றாங்கொட்டை | துத்தம் |
| மனோசிலை | பலகாரை |
| சேவல் நெஞ்செலும்பு | மிளகு |
| தலையோடு | திப்பிலி |

இவைகள் வகைக்கு விராகனெடை-1 எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் அறைத்துக் கயறுபோல் திரட்டி நிழலில் உலர்த்திக் காடியினால் உறைத்துக் கண்ணில் போட்டுவந்தால் ஆணிப்பூ மாறும்.

வேறு முறை

| | |
|---|---|
| கடல்நுரை | துருசு |
| மிளகு | துத்தம் |
| சீரகம் | மனோசிலை |
| அதிமதுரம் | அரிதாரம் |
| வெண்காரம் | திப்பிலி |
| கடுக்காய் | செம்புப்பொடி |

இவைகள் சமனெடை யெடுத்து எலுமிச்சம்பழச் சாற்றால் அறைத்துக் கயறுபோல் திரட்டி முலைப்

பாலில் உறைத்துக் கண்ணில் போட்டுவந்தால் ஆணிப்பூ மாறும்.

## வேறு முறை

ஆமையோடு - நத்தையோடு - முதலைப்பல் - பன்றிக் கொம்பு - சேவல்நெஞ்செலும்பு - புலிநகம் - திப்பிலி - வெள்ளிப்பொடி இவைகள் சமனெடைகொண்டு முலைப்பால் விட்டரைத்துக் கயறுபோல் திரித்து தேனில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் ஆணிப்பூவற்று முளைமாறிவிடும்.

---

## அதிமாங்கிஷ வளர்த்திக்கும் பூபடலத்திற்கும்

| | |
|---|---|
| யானைத்தந்தம் | தேற்றான்விரை |
| முதலைப்பல் | துத்தம் |
| ஆமையோடு | துருசு |

இவைகளை சமனெடைகொண்டு காடியில் அரைத்துக் கயறுபோல் திரித்துத் தண்ணீரில் இழைத்துக் கண்களில் தீட்டிவந்தால் அதிமாங்கிஷ வளர்த்தி, பூபடலம் தீரும்.

---

## பூபடலத்திற்கு

கடுக்காய் - திப்பிலி - வெண்காரம் - சந்தனம் - கடல்நுரை - வெள்ளிலோத்திரம் வகைக்குக் கழஞ்சி-1, பவளம் - துருசு வகைக்குக் கழஞ்சி - 4 இவைகளை முருங்கைப்பூ சாற்றாலரைத்துக் கயறுபோல் செய்து கண்ணில் தீட்டிவந்தால் குணமாகும்.

---



## முளை ஆணிப்பூவுக்கு

துத்தம் - துருசு - சீனிக்காரம் - காக்கணம்வேர் - வளையலுப்பு இவைகளை ஓர் நிறையாயெடுத்து பனைமட்டைச் சாற்றாலரைத்து கயறுபோல் திரித்து முலைப்பாலி லுறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் குணமாகும். அல்லது,

## வேறு முறை

புளியம் இலையை எலுமிச்சம்பழச் சாறுவிட்டுச் சிதைத்துப் பிழிந்து அதில் தேற்றான்விரையும் பச்சைகற்பூரமும் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தாலும் குணமாகும்.

---

## பூபடலம் காசத்திற்கு

| | |
|---|---|
| முத்து | துத்தம் |
| பவளம் | துருசு |
| பளிங்குக்கல் | சீனிக்காரம் |
| காரீயம் | வெண்காரம் |
| இரசம் | வெங்காயம் |
| பீங்கான்வோடு | தலையோடு |

இவைகளை சமனெடையெடுத்து எலுமிச்சம்பழச் சாற்றால் 3-நாள் அரைத்துக் கயறுபோல் மாத்திரை செய்து முலைப்பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் மேற்படி வியாதி குணமாகும்.

---

## குந்தத்திற்கு

பச்சைகற்பூரம் - ரசம் - காரீயம் - மஞ்சள் - திப்பிலி - மிளகு இவைகள் சமனெடையெடுத்து நந்தியா

வட்டைப்பூ சாற்ருல் அரைத்துக் கயறுபோல் செய்து முலைப்பாலில் உரைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் குணமாகும். அல்லது,

வேறு முறை

புளியங்கொழுந்தை இடித்து சாறுபிழிந்து குழம்பாய்க் காய்ச்சி கலுவத்திலிட்டு இந்துப்பு - துத்தம் - துருசு வகைக்கு விராகனெடை - 1 இவைகளைப் பொடித்து அத்துடன் போட்டு அரைத்து அப்படியே ஆறியபின்பு தேன்விட்டுக் குழம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் குணமாகும்.

---

## குந்தம் அமரத்திற்கு

சங்கு - இந்துப்பு - பளிங்குக்கல் - மஞ்சள் - சந்தனம் - மனோசிலை - மிளகு இவைகள் சமனெடையெடுத்து பசும்பால் விட்டரைத்துக் கயறுபோல் செய்து உலர்த்தி தேனில் இழைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் குணமாகும்.

---

## இமிக்கண்ணுக்கு
(அதுவே இமைதிறந்த கண்)

தலைமயிரைச்சுட்ட சாம்பலும் வெண்காரமும் பசும் நெய்விட் டரைத்து களிம்புபோல் செய்து வைத்துக்கொண்டு கண்ணிமையில் போட்டு வரவும்.

வேறு முறை

சங்கிலைச்சாற்றைக் கலுவத்திற் பிழிந்து குழவியினல் களிம்புபோல் வருமளவும் அரைத்து வழித்து



வைத்துக்கொண்டு கண்ணில் போட்டு வந்தாலும் குணமாகும்.

வேறு முறை

சேங்கொட்டை சுட்டக்கரியும், துருசும் ஓர் நிறையாயெடுத்து பசும் வெண்ணெய் கூட்டி களிம்புபோல் அரைத்து இமையின்பேரில் போட்டு வந்தாலும் இமிகண் மாறி உதிர்ந்த மயிர் முளைக்கும்.

---

## விழி கண் குருடு

நன்ருய் வெந்த செங்கல்லைப் பொடித்து வடிகட்டிக் கல்வத்திலிட்டு ஆவின் வெண்ணெய், தேன், நல்லெண்ணெய் இவைகளில் வகைக்கு 1 - சாமம் அரைத்துக் களிம்பாகச் செய்து விழியிலிட்டாலும், பேய்ப்பில்லென்ற வொட்டுவில் (அதாவது திலைபோற் கதிருண்டாயிருக்கும்;) அதைக் கசக்கி விழியிற் பிழிந்து வர குணமாகும்.

---

## கண்வலி படலி வளர்ந்தி ஆணிக்கு

சண்பகம் - 60, காரெள்ளுப்பூ - 100, நந்தியாவட்டம் - 100, துளசிவேர் - சங்கு - தலையோடு வகைக்குக் கழஞ்சு - 1, துத்தம் கழஞ்சு - 2 இவைகள் புளியமலர் சாற்றிலும் எலுமிச்சம்பழச் சாற்றிலும் அரைத்துக் கயிருக்கி முலைப்பாலில் உரைத்து விழியில் விட்டுவர குணமாகும்.

---

## வெக்கடுப்பு - குத்தல் - அமரம் - கண்வலி

கழுவின கற்றாழஞ்சோறு விளாங்காய்ப் பிரமாணம், சீனிக்காரம் விராகனெடை - ½, ஈருள்ளி விராகனெடை - 3, இருப்புச்சிட்டம் விராகனெடை - 6 இவைகள் சிதைத்து வேட்டியில் முடிந்து கொஞ்சம் புளியை ஜலத்திற் கலக்கி அதில் ஷை பொட்டணத்தைக் கொதிக்க வைத்துச் சூட்டுடன் கண்ணில் ஒத்தணஞ் செய்து, ஒரு துளி கண்ணிற் பிழிந்து, சந்தனம் - ஏலம் - நெல்லிமுள்ளி - மிளகு - பொன்னாங்காணி - கழுவின கற்றாழஞ்சோறு சமன்கூட்டி ஆவின் வெண்ணெயி லரைத்துச் சிரசில் தளமிட்டு உள்ளங்காலில் தீப்பறக்கத் தேய்த்து மாலையில் கரி தண்ணீரில் ஸ்நானம் செய்து வந்தாலும் தீரும்; அல்லது,

வேறு முறை

எலுமிச்சம்பழத்தை பொந்துசெய்து அதில் அரப்பொடியும் சீனிக்காரமும் ஓர் நிறையாய் ஒன்றாய்ப் பொடித்துச் செலுத்தித் துணியிற் பொட்டணமாய்ப் பிடித்து நெருப்பில் வாட்டி ஒரு சொட்டு விழியிற் பிழிந்து ஒத்தணஞ் செய்துவந்தாலும் தீரும். அல்லது,

வேறு முறை

சுவற்றில் பசும் வெண்ணெய் அப்பி நீர் வாங்கினதின்பின் எடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாறும் கரிப்பாஞ்சாறும் விட்டுக் களிப்புபோ லரைத்துக் கண்ணில் தீட்டியும் கடுக்காயையாவது உப்பு மண்ணையாவது முலைப்பாலி லரைத்துக் கண்ணிற் புறவளையமிட்டுவர குணமாகும்.

---



## கண் வலிக்கு

கரியுப்பைப் பொடித்துப் பொட்டணங்கட்டி நீராகார ஜலத்திற்றுவைத்து இரண்டு நாழிகைக்கொரு தடவை நேத்திரத்திற் பிழியக் கண்வலி உடனே மாறும்.

---

## சுக்கிரப்படுவனுக்கு

நாவற்பட்டையை முலைப்பால் விட்டுச் சிதைத்து நேத்திரத்தில் வார்த்து அதன் பிறகு நத்தைசதையும் ஆனைநெருஞ்சிற் காயையும் சிதைத்துப் பிழிந்து ஆவாரை யரிசியை கோழிமுட்டை வெள்ளைக்கரு விட்டு அரைத்துப் புறவளையமிட்டு வரவும். அல்லது,

வேறு முறை

கோவையிலைசாறும் கரிப்பன்சாறும் ஒன்றாய்க் கலந்து அதில் தேற்றான்விரை - களிப்பாக்கு - மிளகு இவைகளை யோர் நிறையாக அரைத்துப் போட்டுக் கொதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது அல்லது பொன்னாங்காணி - சிறுகீரை - ஆனைநெருஞ்சில் - உத்தமதாளி - மயிர்மாணிக்கம் இவைகளின் சாறுகளைச் சமமாய்க் கலந்து தலையில் உலர உலரத் தேய்த்துக்கொண்டிருந்து மாலையில் ஸ்நானஞ் செய்து வந்தாலும் தீரும். அல்லது,

வேறு முறை

நல்லெண்ணெய் படி - ½, வெள்ளுள்ளி - முருங்கைப்பட்டை - குப்பைமேனி - தும்பை இவைகளின் சாறு வகைக்கு படி - ¼ ஒன்றாகக் கலந்து அதில் கோஷ்டம் கழஞ்சு - 3 அரைத்துப் போட்டுக் காய்ச்சி

வடித்து மூன்று நாள் காலையில் தலையில் தேய்த்து மாலையில் ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

---

## இமிகண்ணுக்கும் புருவெட்டுக்கும்

குறவையை முள்சிலாம்பு குடல்நீக்கியதின்பேரில் 7-தடவை எருக்கம்பாலை உலர உலர ஊட்டிக் காய வைத்துப் பொடித்தும், துருசு துத்தமும் ஓர் நிறையாய்க்கூட்டி வேப்பெண்ணெய்விட்டு மைபோலரைத்துக்கொண்டு இமையிற் போட்டுவர குணமாகும்.

---

## நேத்திரத்தில் நெருப்புப்பட்ட புண்ணுக்கு

ஆவின் நெய், ஷை இறைச்சிநீர் - பனைமட்டைச் சாறு - நல்ல தண்ணீர் இவைகள் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி விழியிற் கட்டிவர குணமாகும்.

---

## அக்கரம் புருவெட்டிற்கு

வேப்பங்கொழுந்தைக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய்விட்டுக் களிம்புபோ லரைத்துப் புருவத்திலிட்டு வர குணமாகும்.

---

## கண்பிரிதல் புருவெட்டிற்கு

ஊமத்தங்காயை விரைநீக்கி அதற்குள் பாலிற் சுத்திசெய்த பூநாகத்தை நிறையப்போட்டு மூடிச் சட்டியில் வைத்தெரித்துச் சாம்பலாக்கி அதற்கு



நிகர்த் துத்தம் - துருசு சேர்த்து ஆவின் வெண்ணெயால் மைபோலரைத்துக்கொண்டு நேத்திரத்தில் தீட்டி வரத் தீரும்.

---

## நீர்வடிதலுக்கு

வெள்ளைச்சாரணைவேரைத் தேனிலுரைத்து விழியில் தீட்டிவர குணமாகும்.

---

## அந்தக்கண்ணிற்கு

கெந்தகம் - தங்கம் வகைக்குப் பலம் - 1, அஞ்சனக்கல் - காரீயம் வகைக்குப் பலம் - 3, வெள்ளி - செம்பு வகைக்குப் பலம் - 2, இவைகளை ஒன்றாய்க் குகையிலுருக்கி மயனமாய்ப் பொடித்து விழியில் தூவி வரத் தீரும்.

---

## ஆரம் பிரிதற்கண்ணிற்கு

வேப்பங்கொழுந்தும் புளியங்கொழுந்தும் இடித்துக் கியாழஞ் செய்து வடித்துக் குழம்பாய்க் காய்ச்சி அதில் துணியை இரண்டு மூன்று தடவை நனைத்து உலர்த்தித் திரித்து விளக்கில் ஆவின் நெய்விட்டுத் தீபமேற்றிச் சட்டிதுற்றில் ஊமத்தியிலைச்சாறு பூசி மைபற்றவைத்து, திப்பிலி - கடுக்காய் - நெல்லிப் பருப்பு இவைகளை மேற்படி கியாழத்திலரைத்துச் சீலையிற் றடவி முன்போல் தீபமேற்றி மைபற்ற வைத்து இருவகையையும் ஒன்றாய்க் கலந்து ஆவின் வெண்ணெயைக்கூட்டி அரைத்து நேத்திரத்திலிட்டு வந்தாலும் தீரும். அல்லது,

### வேறு முறை

மேற்படி யெழுத்தில் மிளகை அறைத்துலர்த்தி ஆவின் வெண்ணெய் கூட்டி மைபோலறைத்து நேத்திரத்தில் தீட்டி வந்தாலும் குணமாகும்.

---

## பெளிருக்கு

பலகறை - சுட்டசாம்பல் - துத்தம் - துருசு - மஞ்சள் இவைகளை ஓர் நிறையாய் நல்லெண்ணெயில் அறைத்துச் சீலையிற் பூசிக்கட்ட அற்றுவிழும்; மூலமுளையிற் கட்டினாலும் விழும்.

---

## வாணம் - சுக்கிலம் - படலம் - குந்தம்

நந்தியாவட்டமலர் - பிச்சமலர் - முருங்கைமலர் - கொடுப்பைவேர் - அதிமதுரம் - ஏலம் - கோஷ்டம் - செங்கழுநீர்க்கிழங்கு - எலுமிச்சம்வேர் - லவங்கம் - துத்தம் - கடல்நுரை - பவளம் - முத்து இவைகளை யோர் நிறையாய் வெள்ளாட்டுப் பித்தாலாட்டிக் கயிறு செய்துகொண்டு, எலுமிச்சம்பழச்சாறு - ஆவின் நெய்யும் ஒன்றாய்க் கூட்டி காய்ச்சி அதிலுரைத்து நேத்திரத்தில் தீட்டிவர குணமாகும்.

### வேறு முறை

சங்கு - புங்கம்வித்து - வெள்ளைக்காக்கணம்வித்து - துத்தம் - துருசு இவைகளை யோர் நிறையாய்ப் பழச்சாற்றில் அறைத்துக் கயிறுசெய்து முலைப்பாலில் உறைத்து நாளொன்றுக்கு மூன்றுவேளை போட்டு வரக் குணமாகும்

---



## அழிகண்ணிற்கு

இந்துப்பும் கடுக்காய் விரையும் ஓர் நிறையாய் வெண்ணெயில் அறைத்து செம்புப் பாத்திரத்தில் அப்பிவைத்திருந்து களிம்பூறிப் பசுமையானதின் பிறகு எடுத்துக்கொண்டு நேத்திரத்திற் போட்டு வந்தாலும் அழிகண் நிவர்த்தியாகும். அல்லது,

### வேறு முறை

பூநாகத்தைச் சீலையில் முடித்து உமிக்காந்தலிற் புதைத்தெடுத்து அதற்குநிகர் நாவற்கொழுந்து சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றில் அறைத்துலர்த்தி வெண்ணெயிற் கூட்டக் களிம்புபோல் அறைத்து நேத்திரத்தில் தீட்டிவர அழிகண் - வாணம் - சுக்கிரன் தீரும்.

---

## கண் புண்ணிற்கு

துத்தம் - துருசு வகைக்கு வராகனெடை - 1, இரதம் வராகனெடை - 1, மிளகு வராகனெடை - ¼ வெற்றிலைச்சாற்றில் மைபோலறைத்து உலர்த்தி அதன் பிறகு வெண்ணெய் கூட்டி களிம்புபோல் அறைத்துக்கொண்டு புண்ணிற்போட நிவர்த்தியாகும்.

### வேறு முறை

சேவற்பூவையாவது அதில் வருகிற இரசத்தையாவது மூன்று நாள் இருவேளையும் போட குணமாகும்.

---

## நேத்திர வாயுவுக்கு

துத்தம் - துருசு வகைக்கு 1 - வராகனெடை, இரண்டு செங்கொட்டையைச் சுட்டகரி இவைகளை

ஆவின் வெண்ணெயால் அறைத்துக் களிம்புசெய்து நேத்திரத்தில் போட்டுவரத் தீரும். அல்லது,

### வேறு முறை

தாமரைக்கிழங்கு - நெல்லிக்காய் - பொன்னாங்காணி இவைகளின் சாறும், சிற்றாமணக்கெண்ணெ - இளநீர் வகைக்குப் படி - ½, நல்லெண்ணெ படி - 2 இவைகளைக் கலந்து அதில் விலாமிச்சம்வேர் - தாளிசபத்திரி - சண்பகப்பூ - சிறுநாகப்பூ - சந்தனம் - செங்கழுநீர்க்கிழங்கு - கோஷ்டம் வகைக்குப் பலம் - 1 இவைகளை ஆவின்பாலில் அறைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவர குணமாகும்.

---

### நேத்திரவாயு மண்டையிடிக்குந் தைலம்

பொன்னாங்காணி - கையாந்தகரை - காத்தொட்டிக் கற்பூரவெற்றிலை இவைகளின் சாறு, நல்லெண்ணெ - விளக்கெண்ணெ - ஆவின் நெய் வகைக்கு படி - ½, மேற்படி பால் படி - 3 இவைகளைக் கலந்ததில் மிளகு - கஸ்தூரி - மஞ்சள் - கருஞ்சீரகம் - உள்ளி - ஏலம் - கிராம்பு - சந்தனம் - வாய்விளங்கம் வகைக்கு விராகனெடை - 4 மேற்படி சாற்றில் அறைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவர குணமாகும்.

### வேறு முறை

நல்லெண்ணெய் படி - ¼, சீதா - செங்கழுநீர்சாறு படி - ¼ இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் வெள்ளைப்



பூண்டு பலம் - ¼, மிளகு பலம் - 1, வெந்தயம் பலம் - 1 இடித்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடிகட்டி தலை முழுகிவர குணமாகும்.

---

### ஒளிமயங்க வெளிமயங்குந்திற்கு

முயலின் புழுக்கைசுட்ட சாம்பலை ஆவின் நெய் விட்டு மைபோல் அறைத்து நேத்திரத்தில் தீட்டிவர குணமாகும்.

---

### கண்ணில் நீரேற்றத்திற்கு

பச்சைகற்பூரத்தைப் பொன்னாங்காணிச்சாற்றில் அறைத்து நாசியில் நசியஞ்செய்து ஆவாரங்கொழுந்தைச் சட்டியில் வறுத்து ஆவின்பால் தெளித்து கண்ணில் ஆவிபிடித்து அகிற்கட்டை - ஆயிற்பட்டை - கருங்குங்கிலியம் - சதகுப்பை - ஓமம் - சுக்கு - மிளகு - வசம்பு - மஞ்சள் இவைகளை ஓர் நிறையாய்ப் பொடித்து துணியிற் பரத்தி உருட்டித் தீயிற் கொளுத்தி நாசியிற் புகை பிடிக்கத் தீரும்.

---

### சூடுவளர்ந்திற்கு

துத்தம் - துருசு - சிவந்த செங்கற்பொடி இவைகளை யோர் நிறையாயெடுத்து மருட்கிழங்கை வாட்டி பிழிந்த சாற்றில் மைபோல் அறைத்து உலர்த்திப் பின்பு ஆவின் வெண்ணெய் கூட்டி மைபோலறைத்துச் சூட்டின்மேற் போட குணமாகும்.

---

## கண் கூச்சத்திற்கு

வேப்பங்கொழுந்து - கற்றாழைமடல் - கடுக்காய் - தேற்றான்விரை இவைகளை யோர் நிறையாய் முலைப் பாலி லறைத்துக் கொதிக்கவைத்து கண்ணிற்குப் புறவளையமிட்டு பொன்னாங்காணிவேர் அதிமதுரம் இவைகளை முலைப்பால் விட்டுச் சிதைத்து துணியில் முடிந்து முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணில் நாள் ஒன்றுக்கு 4 - 5 தடவை வீதம் பிழிந்துக் கரண்டியில் நெய்யைவெதுப்பி அதில் மேற்படி பொட்டணத்தை நனைத்து வெதுப்பத்துடன் ஒத்தணஞ்செய்து வரத் தீரும்.

---

## இமைத்நடிப்பு கரிப்புக்கு

அரப்பொடியைச் சங்கிலைச் சாற்றிலும் குமரிச் சாற்றிலும் சங்கம்பழச் சாற்றிலும் மயனமாயறைத்து உலர்த்தி நல்லெண்ணெய்விட்டு களிம்புபோலறைத்துக்கொண்டு நேத்திரத்தில் தீட்டிவரத் தீரும்.

---

## கண்சிவப்பு நீர்வடிதலுக்கு

பருத்திவிரைப் பருப்பு - மரமஞ்சள் - திரிபலாதி இவைகளை யோர் நிறையாய் மைபோல் பொடித்து நேத்திரத்திலிட்டு நந்தியாவட்டம்பூச்சாறு - சிப்பிநீர் - பனைமட்டைச்சாறு - முருங்கைப்பூச்சாறு - முலைப்பால் - ஆவின் நெய் வகைக்கு ½-படி வீதம் ஒன்றாய்க் கலந்து அதில் சந்தனம் - மரமஞ்சள் - பனங்குருத்து வகைக்கு கழஞ்சு - ½ இவைகளை அறைத்துப் போட்டு காய்ச்சி வடித்து நேத்திரத்தில் விட்டுத் தலையில்



காலையில் தேய்த்து மாலையில் ஸ்நானஞ் செய்துவரச் சொஸ்தமாகும்.

---

## கண்சிவப்பு, கடுப்பு, பூபடலத்திற்கு

தேற்றான்விரை - கடுக்காய்த்தோல் - புளியவிரைத் தோல் இவைகளை மைபோற் பொடித்து வஸ்திரத்தில் கட்டி முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணிற் பிழிந்து வர குணமாகும்.

---

## வெள்ளெழுத்திற்கு வெண்ணெய்

ஒரு எலுமிச்சம்பழத்தைக் கயிற்றிற் கோர்த்து அதின்மேல் நூற்றெட்டு கிராம்பை ஊன்றி விளாங் காய்ப் பிரமாணம் பசுவின் வெண்ணெய்க்குட் பொதிந்து மூடி அதைப் புதுச்சட்டியில் அடியிற் படாமல் தொங்கவிட்டு அன்றாடம் வெவ்வேறு சுத்த ஜலம் வார்த்து வந்து நாற்பதாம் நாளெடுத்து லவங் கத்தையும் பழத்தையும் நீக்கிச் செப்புச் சிமிளிலடைத் துக்கொண்டு சத்திச்சாரணைச்சாற்றில் கொஞ்சம் வெண்ணெயை மத்தித்து நாற்பது நாள் வரை போட்டுவர வெள்ளெழுத்தும் மற்ற கண் ரோகங்களும் குணமாகும். அல்லது,

### வேறு முறை

மேற்படி வெண்ணெய் பலம் - 1, பீதரோகணி பலம் - ½ இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் ஒருநாள் அறைத்துச் செப்புச் சிமிளிலடைத்துக் கொண்டு விழியிற் போட்டுவர வெள்ளெழுத்து முதலாகிய கண் ரோகங்கள் நிவர்த்தியாகும். அல்லது,

வேறு முறை

மேற்படி வெண்ணெய் பலம் - 1, மிளகு விரா கனெடை - [illegible] இவைகளை கல்வத்திலிட்டு மைபோலரைத்துக்கொண்டு நேத்திரத்தில் தீட்டிவர வெள்ளெழுத்து முதலான கண் ரோகங்கள் நிவர்த்தியாகும். அல்லது,

வேறு முறை

புரசம்பாலை 4 - 5 நாள் நேத்திரத்தில் போட்டாலும், அல்லது தும்பை - நந்தியாவட்டம் - காரெள் - புளி இவகளின் பூவும், திப்பிலியும் தேன்விட்டு மைபோல் அரைத்துக்கொண்டு நேத்திரத்தில் போட்டுவந்தாலும் தீரும். அல்லது,

வேறு முறை

ஓரிலைத்தாமரைவேர் - சங்கு - தலையோடு - துத்தம் - துருசு - வெள்ளைக்கற்பொடி இவைகளை யோர் நிறையாய் எலுமிச்சம்பழச் சாற்றிலும் முருக்கையிலைச் சாற்றிலும் வகைக்கொரு நாளரைத்து கபிறு செய்து முலைப்பாலி லுரைத்து கண்ணில் நாற்பது நாள் போட்டுவர நிவர்த்தியாகும்.

மேற்காட்டிய பிரயோகங்களிலொன்றை உபயோகப்படுத்தி இதனடியில் வருகிற தைலத்தையும் முழுகிவரக் கண்ணைச் சார்ந்த பிணிகள் நிவர்த்தியாகும்.

---

## வெள்ளெழுத்து, குருட்டுக்கண் முதலான கண் ரோகங்களுக்கும், உடம்பு வலிக்கும் தைலம்

பொன்னாங்காணி ரசம் - பொற்றலைக்கரிப்பான் ரசம் - நெல்லிக்காய்ரசம் - நல்லெண்ணெய் வகைக்குப் படி - 8, முசுமுசுக்கை - நெருஞ்சி - கண்டங்கத்திரிக்

100418



காய் - முள்ளிகத்திரிக்காய் - தென்னம்பூ - வில்வம் - வாதநாராயணயிலை இவைகளின் சாறு, இளநீர் வகைக்குப் படி 1, இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் நன்னாரிவேர் பலம் - 40, தாமரைப்பூ - மிளகு - அதிமதுரம் - சந்தனம் - அன்னாசு மொக்கு வகைக்குப் பலம் - 2, சீரகம் - கொத்தமல்லி வகைக்குப் பலம் - 4, கஸ்தூரிமஞ்சள் - வெட்டிவேர் - சோம்பு - கல்லுப்பு - விலாமிச்சம் வேர் - மல்லிகை புஷ்பம் வகைக்குப் பலம் - 1 இவைகளை 8 - படி ஆவின்பாலில் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

---

## மாலைக்கண், வெள்ளெழுத்து, புகைநீர்ச்சலுக்கு

மிளகு - திப்பிலி வகைக்குக் கழஞ்சு - 5, கடுக்காய் விரை கழஞ்சு - 3 இவைகளைத் தனித்தனி மூன்று வெள்ளாட்டுப்பித்துக்குள் அடைத்துப் புகைபடுகிற விடத்தில் ஒரு மண்டலம் கட்டிவைத்திருந்து எடுத்துப் புளியம்பூச் சாற்றிலும் பனைமட்டைச் சாற்றிலும் அரைத்துக் கபிறு செய்து முலைப்பாலி லுரைத்துக் கண்ணில் தீட்டிவர மாறும். அல்லது,

வேறு முறை

சுழல்வண்டு - சுட்டசாம்பல் - வெள்ளுள்ளி - மிளகு இவைகளை ஓர் நிறையாய்க் கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாறும் நீர்முள்ளிச்சாறும் நல்லெண்ணெயும் விட்டுக் களிம்புபோ லரைத்து அந்திசந்தி மூன்று நாள் கண்ணில் தீட்டி விளக்கெண்ணெயை தலைக்குத் தேய்த்து

நான்கைந்து நாள் முழுகினால் அருந்ததி கண்ணில் தோன்றும்.

---

## நீலகாசம் - பித்தகாசம் - மந்தகாசம் - படலம் - பில்லம் - மயிர்க்குத்தல் - புரூவெட்டு - மாலைக்கண் - நீர்வடிதல் - குந்தம் - நேத்திரவாயு முதலானவைகளுக்கு

முத்து - வெள்ளி - தாம்பிரம் - சங்கு - துருசு - துத்தம் - வெண்கலம் - தலையோடு - பொன் - பீதரோகணி - புங்கன்விரை இவைகளை ஓர் நிறையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அறைத்துக் கயறுசெய்து முலைப்பாலிலாவது, நந்தியாவட்டம்பூச் சாற்றிலாவது உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் அதனடியில் சொல்லிய தைலத்தையும் முழுகிவர நிவர்த்தியாகும்.

### மேற்படி ரோகங்களுக்குத் தைலம்

பொன்னாங்காணி - சிறுகீரை - சீந்திற்கொடி - எலுமிச்சம்பழம் - நாரத்தம்பழம் இவைகளின் சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி - 1, முத்தக்காசு - கோஷ்டம் - அதிமதுரம் - ஏலம் - சண்பகப்பூ - சிறுநாகப்பூ - லவங்கம் வகைக்குப் பலம் - ¼ விதம் அறைத்துப்போட்டு காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

---

## கண்வலி, சிகப்பு, கடுப்பு, தினவு, நீர்வடிதலுக்கு

தான்றிக்காய் - மாசிக்காய் - கடுக்காய் - காசுகட்டி வகைக்கு விராகனெடை - 1, அபின் - பொரித்த சீனிக்காரம் வகைக்கு விராகனெடை - ¼ கரண்டியில் பொடித்துப்போட்டு அதில் வாட்பூலாயிலை - கருவேலிலை வகைக்கு 1 - படி விதம் இடித்துப் பிட்டவித்துச் சாறுபிழிந்து கொதிக்கவைத்து செப்புத்தடியால் மைபோலறைத்து விழியிற் புறவளையமிட்டுப் புளியிலையை வேகவைத்த தண்ணீரால் கண்ணைக் கழுவி 2 - 3 - தடவை போடத் தீரும். அல்லது,



### வேறு முறை

புளியைக் கறைத்து நேத்திரத்தில் ஒரு நாளைக்கு 4 - 5 - தடவை பிழிந்து, துளசி - புண்ணாக்கிலை - புளியிலை இவைகளை யோர் நிறையா யிடித்துச் சீலையிற் கட்டி விழியில் ஒத்தணஞ் செய்து ஆவாரம்பூவை அறைத்துச் சிரசில் தளமிடத் தீரும். அல்லது,

### வேறு முறை

இருப்புத் தகட்டை நெருப்பில் சிவக்கக் காய்ச்சி யெடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாற்றையாவது, புளியிலைச் சாற்றையாவது விட்டுக் கரிரேளம் - கடுக்காய்த்தோலும் - சீனிக்காரமும் பொடித்துப் போட்டு இருப்புக்குழவியாற் களிம்புபோல் நன்றாயறைத்துப் புறவளையமிட்டுக் கருவேல் - புளிவேரிலை - தாமரையிலை - பொன்னாங்காணி - சிறுகீரை - பஞ்சதிரவியம் - கம்பிப்பிசின் - மிளகு - கஸ்தூரிமஞ்சள் இவைகளை ஓர் நிறையாய்க் காடிவிட்டறைத்துக் குழம்பாய்க் காய்ச்சி சிரசில் தளமிடத் தீரும்.

### வேறு முறை

கோழிமுட்டையை யுடைத்து வெள்ளைக் கருவைப் பீங்கானில் விட்டு இதிற்கொஞ்சம் சீனிகாரத்தைப் போட்டு சிறுகீரைவேரால் கடைந்தால் வெண்ணெய்

போல் வரும். அதை விழியில் போட்டு கருவேலங் கொழுந்தும் மாதுளங்கொழுந்தும் வகைக்கு ஒருபிடி வீதம் இடித்து ¼-படி ஆவின்பாலிற்போட்டு வேக வைத்துப் பிழிந்து குழம்பாய்க் காய்ச்சி இருப்புத் தகட்டிலிட்டு இருப்புக் குழவியாற் களிம்புபோலரைத்துக்கொண்டாவது அல்லது இருப்புத்தகட்டை நெருப்பிற்காய்ச்சி அதில் சீனிக்காரம் - துத்தம் - துருசு - இவைகளை யோர் நிறையாய்ப் பொடித்துப்போட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு மைபோலரைத்துக் கொண்டு விழியிற் புறவளையமிட்டு மேற்சொல்லிய புகையைக் காட்டிவரத் தீரும்.

---

## கண்வலி, வெக்கடுப்பு, நேத்திர வாய்விற்கு

களிம்புள்ள வெண்கலத்தட்டில் முலைப்பாலாவது எருமைப்பாலாவது விட்டுச் செப்புக்குழவியாலரைத்துக் களிம்புண்டாக்கி அந்தக் களிம்பைப் பருத்திப் பஞ்சில் ஊட்டி மட்டகலத்தில் மூன்றுவில்லைசெய்து ஒன்றின்மேல் ஒன்றை வைத்து ஒரு சட்டியில் புளியம் பொருக்குப் போட்டுத் தணலுண்டாக்கி அதில் அரை வீசம் படி எள்ளு பொடித்துப்போட்டு புகைபஞ்சிலேறும்படி வைத்து மூடிப் புகையடங்கினதின் பேரில் காலை மாலை மத்தியானத்தில் ஒவ்வொரு வில்லையாய் நேத்திரத்தில் பிழிந்துவரத் தீரும். அல்லது,

### வேறு முறை

கொடிப்பை - ஓரிலைத்தாமரை - வெள்ளைக்காக்கணன் - சிறுகீரை இவைகளின் வேர்களை ஓர் நிறை

யாய் எலுமிச்சம்பழச்சாற்றில் மயனமாய் அரைத்து உலர்த்திப் பின்பு வெண்ணெயைக் கூட்டிக் களிம்பு போலரைத்து நேத்திரத்தில் தீட்டிவரத் தீரும். அல்லது,



### வேறு முறை

சங்கு - புளி - வெள்ளைச்சாரணை - பொன்னாங்காணி - சிறுகீரை - கரிப்பான் இவைகளின் இலைச் சாற்றை ஓர் நிறையாய்க் கலந்து அதிற் சீலையை 6 - 7 தடவை நனைத்துலர்த்தித் திரித்து நண்டுகொழுப்பில் துவைத்துத் தீயிற் கொளுத்திச் சாம்பலாக்கி அதில் வெண்ணெயைக் கூட்டிக் களிம்புபோல் அரைத்து நேத்திரத்திற் தீட்டிவந்தாலும் தீரும்.

---

## விழிவேதனை படலந்துக்குப் புறவளையம்

சிற்றாமணக்கின்வேரும் பேராமணக்கின்வேரும் ஓர் நிறையாய் வேலிப்பருத்திச் சாற்றில் மைபோல் அரைத்துக் கலக்கிக் குழம்பாய்க் காய்ச்சி விழியிற் புறவளையமிட்டு உச்சியில் தளமிட்டுவர நீங்கும்.

---

## விழிவீங்கம், எரிவு, தினவு, படலம், சிவப்பு, கடுப்பு, நீர்வடிதலுக்குப் புறவளையம்

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிமுள்ளி |
| அதிமதுரம் | தேற்றான்விரை |
| கருவேலியிலை | புளியங்கொழுந்து |

இவைகளை யோர் நிறையாய்க் கற்றாழை மடலுக்குப் பொதிந்து உமிக்காந்தலிற் புதைத்து வெந்தபதத்

தில் மருந்தை எடுத்து முலைப்பால் விட்டுக் களிம்பு போலரைத்துக்கொண்டு நேத்திரத்திற் புறவளையமிட்டும், காயா - வரட்பூலா - புளி இவைகள் இலைச்சாறு வகைக்குப்படி - ¼ ஒன்றாய்க்கலந்து அதில் நெல்லி முள்ளி - சந்தனம் - தேற்றான்விரை - ஆமையோடு இவைகளை ஆவின்பாலில் மைபோலரைத்துப் போட்டு குழம்பாய்க் காய்ச்சி சிரசிற் காலையில் தளமிட்டு மாலையில் சுடுதண்ணீரில் ஸ்நானஞ் செய்துவர நீங்கும்.

## மேற்படி வியாதிகட்கு ஒத்தனம்

காயாவிலை - கருவேலியிலை - கடுக்காய் - கற்றாழஞ் சோறு இவைகளை ஒன்றாய்ச் சிதைத்தாவது, அல்லது மருதம்பட்டை - சீரகம் - மதுரம் இவைகளைச் சமமாய் சிதைத்தாவது துணியில் முடிந்து அதைக் கரண்டியில் நெய்விட்டு வெதுப்பி அதில் வைத்து ஒத்தனஞ் செய்தாலும் தீரும். அல்லது,

### வேறு முறை

ஒருபடி ஆவின்பாலில் ஒருபடி புளியங்கொழுந்தும் நாலு கடுக்காயும் தட்டிப்போட்டு வேகவைத்து விழியில் ஆவிபிடித்து அதை சீலையில் முடிந்து ஒத்தனஞ் செய்ய மிகுந்த நன்மை யுண்டாகும்.

## மேற்படி வியாதிகட்கு இமையின் மேலிடும் பஞ்சு

ஆவின்பாலில் உத்தாமணி வேரை அரைத்து மேற்படி நெய்யிற்போட்டு வேகவைத்து வடித்து இமையைச் சுற்றிப்பூசி உலர்ந்த பின்பு சந்தனத்தைப் புறவளையமிட்டு இரவில் மேற்படி நெற்றியில்



பஞ்சை பூட்டி இமையின்மேல் போட்டு நித்திரை செய்யவும்.

## மேற்படி வியாதிகட்குத் தாரை, புறவளையம்

சிற்றாமணக்கின்வேர் - கடுக்காய்த்தோல் வகைக்கு கழஞ்சு - 4 இடித்து 2 - படி தண்ணீரிற் போட்டு ⅛ - படியாய் வற்றவைத்து வடிகட்டி நேத்திரத்தில் தாரைவிட்டாலும் தீரும். அல்லது,

### வேறு முறை

முசுமுசுக்கையிலை ஒரு பிடி - அதிமதுரம் - மரமஞ்சள் வகைக்குக் கழஞ்சு - 1 இவைகளைச் சிதைத்து ஆவின் பாலிலரைத்து மேற்படி நெய்யிற்போட்டு வேகவைத்து வடிகட்டி நேத்திரத்தில் தாரையிட்டு பொன்னாங்காணிவேர் - சந்தனம் - அதிமதுரம் இவைகள் ஓர் நிறையாய் முலைப்பாலில் அரைத்துக் கலக்கி வெதுப்பி விழியில் புறவளையமிட்டு உச்சியில் தளமிட்டு வரத் தீரும்.

ஈருள்ளியும் குருஞ்சானும் ஓர் நிறையாய்ச் சிதைத்து மூன்று நாள் நேத்திரத்தில் வார்க்கத் தீரும்.

---

## கண் ரோகங்களுக்கு மாத்திரை

பச்சைகற்பூரம் - இந்துப்பு வகைக்கு விராகனெடை - ⅛, ரசம் விராகனெடை - ¼, திப்பிலி - மிளகு - காரீயம் வகைக்கு விராகனெடை - ½, பூநாகச்சத்து - கடுக்காய்ப்பருப்பு வகைக்கு விராகனெடை - 1, அரி

தாரம் விராகனெடை - 2, எலுமிச்சம்பழச் சாற்றில் 3 - நாள் அரைத்துக் கபிறு செய்துக்கொண்டு முலைப் பாலில் உறைத்து விழியிற் போட்டுவரப் படலம் - பில்லம் - சிவப்பு - நீர்ப்பாச்சல் - திமிர் முதலான கண் ரோகங்கள் தீரும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| ஆமையோடு | அஞ்சனக்கல் |
| தலையோடு | கல்மதம் |
| குதிரைப்பல் | யானைத்தந்தம் |
| பன்றிக்கொம்பு | சேவல்நெஞ்செலும்பு |
| தேற்றான்விரை | துருசு |
| துத்தம் | முத்து |
| சங்கு | பீதரோகணி |
| காவிக்கடலாமையோடு | வெள்ளிலோத்திரம் |

இவைகளை ஓர் நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக் கபிருக்கி முலைப்பாலி லுறைத்து கண்ணிற் போட்டுவர, படலம் - பில்லம் - சிவப்பு - நீர்ப்பாச்சல் - திமிர் முதலான கண்ரோகங்கள் தீரும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| திரிகடுகு | செஞ்சந்தனம் |
| திரிபலை | முந்திரிப்பழம் |
| வாலுளுவையரிசி | மஞ்சள் |
| வாய்விளங்கம் | நன்னாரிவேர் |
| தாமரைக்கிழங்கு | வெள்ளிலோத்திரம் |
| அதிமதுரம் | துத்தம் |
| செம்புப்பொடி | பீதரோகணி |



| | |
|---|---|
| இந்துப்பு | காரியம் |
| வெண்காரம் | |

இவைகளை ஓர் நிறையாய் சங்கம்பழச் சாற்றில் அரைத்துக் கபிருக்கொண்டு முலைப்பாலிலுறைத்து கண்ணிற் போட்டுவர, திமிர்படலம் - நீர்வடிதல் - காசம் முதலானவைகள் குணமாகும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| திரிகடுகு | பீதரோகணி |
| திரிபலை | பொன் மெழுகு |
| அதிமதுரம் | வெள்ளைக்காக்கணும்வேர் |

இவைகளை ஓர் நிறையாய் கழுதைப் பாலிலும், ஆவின்பாலிலும், முலைப்பாலிலும் வகைக்கொரு ஜாமமாய் அரைத்துக் கபிறு செய்து முலைப்பாலி லுறைத்துப்போட்டு வந்தாலும் தீரும். அல்லது,

வேறு முறை

பச்சைக்கற்பூரம் - காரியம் - திப்பிலி - மிளகு வகைக்குக் கழஞ்சு - $\frac{1}{4}$, இரதம் - உகாயவிரை - பூநாகம் வகைக்குக் கழஞ்சு - $\frac{1}{2}$ இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கபிருக்கி சிறுநீரி லுறைத்துப் போட்டு வந்தாலும், திமிர்படலம் - காசம் முதலானவைகள் தீரும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| தாம்பரம் | நீலம் |
| துருசு | கருவளையல் |
| துத்தம் | வெண்காரம் |

| | |
|---|---|
| முத்து | கணவாயோடு |
| பவளம் | |

இவைகளைச் சமமாய்ப் பழச்சாற்றி லறைத்துக் கபிறு செய்துக்கொண்டு, புழுவெட்டிச் செவ்வேர் - சதைவளர்த்திக்கு எலுமிச்சம்பழச் சாற்றிலும், நீர் பாச்சல் கூச்சத்திற்கு பனைமட்டைச் சாற்றிலும், பூக் கட்டிக்கு நெருஞ்சிலைச் சாற்றிலும் உரைத்துக் கண்ணில் போட்டுவர குணமாகும். அல்லது,

வேறு முறை

செம்புப்பொடி - துத்தம் - துருசு - வெண்கலம் - வளையல்வெள்ளைக்கல் - ஓரிலைத்தாமரைவேர் - வெட்பூலாவேர் வகைக்குக் கழஞ்சு - 1, இந்துப்பு கழஞ்சு - ¼ எலுமிச்சம்பழச்சாற்று லறைத்து கபிருக்கிக்கொண்டு முலைப்பாலில் உரைத்துப்போடச் சகல கண்ரோகங்களும் குணமாகும். அல்லது,

வேறு முறை

வெள்ளைக்காக்கணம்வேர் - துத்தம் - துருசு - பளிங்குக்கல் - சங்கு - மஞ்சள் - திப்பிலி - சந்தனம் - பச்சைகற்பூரம் - செம்புப்பொடி இவைகளை ஓர் நிறையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் 5 - நாள் மைபோல் அரைத்து கபிறுசெய்து முலைப்பாலில் உரைத்து கண்ணிலிட்டு வரச் சகல காசம், சுத்துக்குலைவு, அழற்றி, உள்குத்துஉளைவு முதலான சகல ரோகமும் நிவர்த்தியாகும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| வெங்காரம் | வளையலோடு |
| செம்புப்பொடி | வெட்பூலாவேர்ப்பட்டை |



| | |
|---|---|
| வெண்கலம் | ஓரிலைத்தாமரைவேர் |
| காரீயம் | இந்துப்பு |

வகைக்கு விராகனெடை - 1, இவைகளை முருங்கைமலர்ச் சாற்றில் அறைத்துக் கபிருக்கிக்கொண்டு வாணசுக்கிரனுக்கு நாயுருவிச் சாற்றிலும், உத்தாமணிச் சாற்றிலும், கொடிய ஆணிப்பூ படலம் - மந்தாரகாசம் - நீர்ப்பாச்சல் - எழிச்சி - சிவப்பு - சிவந்த அழிகண்ணுக்கு நீர்ப்பூலாவேர் சாற்றிலும் மேற்படி யுண்டையையும் படிகாரமும் வெங்காரமும் உரைத்துப் போட நீங்கும். அல்லது,

வேறு முறை

பொன்னாங்காணி - சிறுகீரை - பூலா இவைகளின் வேர் - திப்பிலி - துத்தம் - துருசு - புளியமலர் இவையெல்லாம் ஓர் நிறையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அறைத்துக் கபிறுசெய்து மேற்படி சாற்றினால் உரைத்துப்போட சகல கண் ரோகங்களும் நீங்கும்.

---

## கண் ரோகங்களுக்குப் பொடி

| | | |
|---|---|---|
| வெண்காரம் | விராகனெடை | 1 |
| துத்தம் | ,, | 2 |
| சீனிக்காரம் | ,, | 2 |
| முட்டைத்தோல் | ,, | 4 |
| பலகரை | ,, | 8 |

இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலும் சிறுகீரை சாற்றிலும் மைபோலறைத்து உருட்டிக் காயவைத்து ஷை வேரை அறைத்துக் கவசஞ் செய்து சட்டியில்

வைத்தெரித்துப் பஸ்பித்துப் பொடித்துக்கொண்டு எள்ளுப்பிரமாணம் கண்ணில் போட, ஆணிப்பூ - நீர்க் குமிழ் - குந்தம் - சதைவளர்த்தி - பற்பரோகம் - அதி மாங்கிஷ வளர்த்தி - உருத்தல் - பில்லம் - உத்துங்கம் - நீர்ப்பாச்சல் - சூடுவளர்த்தி - அமரம் முதலியவைத் தீரும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| ஓரிலைத்தாமரைவேர் | பவளம் |
| பொன்னுங்காணிவேர் | முத்து |
| துத்தம் | தலையோடு |
| துருசு | சங்கு |

இவைகளை சமமாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து வில்லைதட்டி காயவைத்து ஓட்டில்வைத்து மூடி சீலைமண்செய்து புளியம்பொருக்கிற் புடம்போட்டு எடுத்து எள்ளுப் பிரமாணம் கண்ணில் தூவிவரப் பற்பரோகம் - பூபடலம் - விரணம் - சுக்கிரன் முதலியவை நீங்கும். அல்லது,

வேறு முறை

துருசு - சங்குப்பொடி - தலையோடு - பூலாவேர் - ஓரிலைத்தாமரைவேர் இவைகளில் வகைக்கு விராகனெடை - 2 வீதம் எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாளரைத்து வில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு சீலைசெய்து முன்போற் புடமிட்டு அதை இருகூறு செய்து ஒருகூறுக்கு நாலிலொன்று பீதரோகணியும் ஒரு பணவெடை பச்சைகற்பூரமும் கூட்டி பொடித்து எள்ளுப் பிரமாணம் கண்ணில் தூவிவர பற்பரோகம் - நீர்ப்பாச்சல் நிவர்த்தியாகும். அல்லது,



வேறு முறை

மற்றொருபங்கை பொடித்துக்கொண்டு ½-பண வெடை வீதம் கண்ணில் தூவிவர, கண்படுவன் - விழி கண்குருடு - துர்மாங்கிஷ நிவர்த்தி - நீர்முட்டல் - தில்லை நேத்திரவாயு - பித்தகாசம் - பதகிரி - செவ்வேர்பூ - பொன்மணி - மந்தாரகாசம் - இரத்தபடலம் - அடியினால் சம்பவிக்கும் கண்கலக்கம் முதலியவை தீரும்.

வேறு முறை

சீனம் - கல்நார் - வெள்ளை கற்கண்டு - துருசு வகைக்கு விராகனெடை - 1, வெந்தலையோடு விராக னெடை - 2 இவைகளை மயனமாய் பொடித்துக் கொண்டு நெல்லிடை கண்ணில் தூவிவரப் படலம் - காசம் - பூ முதலான கண் ரோகங்களும் தீரும்.

வேறு முறை

சந்தனம் - துத்தம் - துருசு - தாரம் - பீதரோகணி - பச்சைக்கற்பூரம் இவைகளை யோர் நிறையாய் மைபோலரைத்து எள்ளுப்பிரமாணம் கண்ணில் தூவி வர சகல கண் ரோகங்களும் தீரும்.

வேறு முறை

| | |
|---|---|
| மஞ்சள் | மனோசிலை |
| சந்தனம் | இந்துப்பு |
| துத்தம் | வெட்பூலாவேர் |
| துருசு | பீதரோகணி |
| பச்சைகற்பூரம் | வெள்ளிலோத்திரம் |

இவைகளை யோர் நிறையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாளரைத்து உலர்த்தி பொடித்து

எள்ளுப்பிரமாணம் கண்ணில் தூவிவர சகல கண் ரோகங்களும் குணமாகும்.

---

## கண் ரோகங்களுக்குக் குழம்பு

குருணிச் செவ்விளநீரில், பொன்னாங்காணி - சிறுகீரை இவைகள் வேர் - திரிபலை வகைக்குப் பலம் - 1, சந்தனம் - கோஷ்டம் - லவங்கம் - மரமஞ்சள் - ஏலம் - அதிமதுரம் - சீரகம் - தேவதாரம் - சண்பகமலர் - செங்கழுநீர்க்கிழங்கு - தாரைவளையம் - விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் வகைக்குப் பலம் - 3 இவைகளைப் பொடித்துப்போட்டு குழம்பாய்க் காய்ச்சி பிறுத்து கல்வத்தி விட்டு, அதில் துத்தம் - கடல்நுரை - அஞ்சனக்கல் - பீதரோகணி - படிகாரம் வகைக்குக் கழஞ்சு - 1 பொடித்துப் போட்டு மைபோலரைத்து உலர்த்திப் பின்பு பச்சை சூடம் 1 - பணவெடை கூட்டி தேன் விட்டுக் குழம்புபோ லரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர, நீர்பாச்சல் - புகைச்சல் - பில்லம் - பற்பரோகம் - படலம் - வாதகாசம் - பயித்தியம் - காசம் - கண்பிரிதல் ஆகியவை நிவர்த்தியாகும். அல்லது,

### வேறு முறை

| | |
|---|---|
| துத்தம் | இந்துப்பு |
| துருசு | திப்பிலி |
| வெண்காரம் | சுக்கு |
| மிளகு | பச்சைகற்பூரம் |

வகைக்குக் கழஞ்சு - 1, இவைகளை பொடித்து தேனும் வெண்ணெயும் சேர்த்து குழம்புபோலரைத்துக் கண்ணில் தீட்டிவர, வாணசுக்கிரன் - காசம் -



படலம் - பூளை - நினைவு - சொறி - அன்னகோபம் - அழிகண் - அமரம் - திமிர் - நீர்பாச்சல் குணமாகும்.

---

## கண் ரோகங்களுக்கு மை

பீதரோகணி - மனோசிலை வகைக்கு 1 - கழஞ்சு விதம் ஆவின் நெய்யிலும் பாலிலும் அரைத்து புது சட்டித்தூரிலப்பி விளக்கில் நெய்விட்டு தீபமேற்றி மைபற்றவைத்து அதற்கு நிகர் துணி சுட்டகரி சேர்த்து, வெண்ணெயில் மத்தித்து நேத்திரத்தில் தீட்ட சகல கண் ரோகங்களும் போகும். அல்லது,

### வேறு முறை

| | |
|---|---|
| வேம்பு | தேட்கொடுக்கு |
| புளி | கையாந்தகரை |
| வெட்பூலா | வெள்ளைச்சாரணை |
| முருக்கு | சங்குயிலை |

இவைகளின் சாறுகளை யோரளவாய்க் கலந்ததில் துணியை 6-7 தடவை நனைத்து உலர்த்தித் திரித்து விளக்கிட்டு நல்லெண்ணெய் விட்டு தீபமேற்றி புது சட்டித்தூரில் ஷை சாறுகளை பூசி மைபற்றவைத்து அதற்கு நிகர் துத்தம் - அஞ்சனக்கல் - புளியமலர் - கடுக்காயரிசி - அதிமதுரம் - இந்துப்பு - இரும்புப் பொடியுங் கூட்டி ஆவின் வெண்ணெயால் அரைத்துக்கொண்டு விழியில் தீட்டிவர அழிகண் - பில்லம் - கடுப்பு - நீர்வடிதல் - படலம் முதலியவை நிவர்த்தியாகும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| வேம்புயிலை | கையாந்தகரையிலை |
| விளாயிலை | தேட்கொடுக்குயிலை |
| உப்பிலி | சங்குயிலை |

இவைகளின் சாறு யோரளவாய் கலந்து முன் போல் துணியில் ஊட்டி மைபற்றவைத்து அதற்கு நிகர் துத்தம் - துருசு - வெங்கலப்பொடி - திப்பிலி - இந்துப்பு கூட்டி எலுமிச்சம்பழச் சாற்றிலறைத்து உலர்த்தி பின்பு ஆவின் வெண்ணெய் கூட்டி அறைத்துக்கொண்டு நேத்திரத்தில் தீட்டிவர விழிசிகப்பு - படலம் - எழுச்சி - கண்பிரிதல் - புழுவெட்டு - புகைச்சல் - இமைத்தடிப்பு - நீர்முட்டல் முதலியவை தீரும். அல்லது,

வேறு முறை

| | |
|---|---|
| சிறுகீரை | பாடாவரை |
| பொன்னுங்காணி | துளசி |
| வேலிப்பருத்தி | தா துளே |
| கரிப்பான் | புளியாரை |
| மூவிலை | விஷ்ணுகாந்தி |
| மின்னி | |

இவைகளின் சாறுகளை புதுசட்டித்துரில் 10 - தடவை உலர உலரப் பூசி ஷெ சாறுகளில் வஸ்திரத்தை நனைத்துலர்த்தித் திரித்து நெய்விட்டு தீபமேற்றி சட்டித்துரில் மைபற்றவைத்து துத்தம் - துருசு குன்றுமணிப் பிரமாணம் கூட்டி ஆவின் வெண்ணெயால் அறைத்துக்கொண்டு விழியில் தீட்டிவர சகலமான கண்ரோகங்களும் நிவர்த்தியாகும். அல்லது,



வேறு முறை

| | |
|---|---|
| பொன்னுங்காணி | புளியம்பயிலை |
| சிறுகீரை | கீழ்க்காய்நெல்லி |
| கரிப்பான் | வேம்பு |
| பொடுதலை | எருக்கிலைப்பழுப்பு |
| குப்பைமேனி | நாயுருவி |
| ஊமத்து | வேலிப்பருத்தி |
| முருங்கை | துளசி |
| அகத்தி | |

இவைகளின் சாறுகளை முன்போல் சட்டித்துரிலும் துணியிலும் ஊட்டி திரி திரித்து நல்லெண்ணெய் விட்டுத் தீபமேற்றி மைபற்றவைத்து, துத்தம் - துருசு - படிகாரம் வகைக்கு விராகனெடை - 1 கூட்டி பொன் முசுட்டை - சென்னயுருவி - எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றிலறைத்து உலர்த்தி வெண்ணெய் சேர்த்து அறைத்துக்கொண்டு கண்ணிலிட்டுவரச் சகலமான கண் ரோகங்களும் நிவர்த்தியாகும்.

---

## கண் ரோகங்களுக்கு விழியிற்கட்ட நெய்

ஆவின் நெய், பால் வகைக்குப் படி - 1 ஒன்றாய்க் கலந்து அதில் முடக்கொத்தான் - சந்தனம் - பூமிசர்க்கரைக்கிழங்கு - செங்கழுநீர்க்கிழங்கு - அதிமதுரம் - அலரிவேர் - தாமரைக்கிழங்கு வகைக்கொரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அறைத்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து விழியிற்கட்டிவர, நீலகாசம் - கண்வலி வாணப்படலம் தீரும்.

### வேறு முறை

கந்தியாவட்டப்பூ - முருங்கைப்பூ - பனையமட்டை - பொன்னாங்காணி - சிறுகீரை - பச்சைமஞ்சள் - எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு, கிளிஞ்சல்நீர் வகைக்குப் படி - ¼, ஆவின் நெய் படி - ½ இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம் - கோஷ்டம் - ஏலம் - லவங்கம் - சண்பகப்பூ வகைக்குக் கழஞ்சு - 2 அறைத்துப்போட்டு காய்ச்சி வடித்து மூன்று துளி விதம் விழியிற்கட்டி வரப், பூ - இரத்தப்படிவன் - சதைவளர்த்தி முதலியவை நிவர்த்தியாகும்.

### வேறு முறை

ஆவின் நெய்யில் பனைமட்டை - மருட்கிழங்கு இவைகளின் சாறு, கிளிஞ்சல் நீர் வகைக்குப் படி - 1 ஒன்றாய்க் கலந்து அதிமதுரம் பலம் - 1, ஆவின் பால் விட்டறைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து விழியிற் கட்டிவர, கண்வேக்காடு - ரணம் - சுக்கிரன் - கண்ணோயின்பேரிற் கண்ட வெள்ளை வாங்கும்.

### வேறு முறை

ஆவின் நெய் - முலைப்பால் வகைக்குப் படி - ½ கலந்து அதில் அதிமதுரம் - பொன்னாங்காணிவேர் - சிறுகீரைவேர் வகைக்குக் கழஞ்சு - 1 அறைத்துப் போட்டு காய்ச்சி வடித்து விழியிலிட்டுவரக், கண்ணெரிவ மாறி கண் குளிரும். அல்லது,

### வேறு முறை

| | |
|---|---|
| நற்சீரகம் | பவழம் |
| ஏலம் | அதிமதுரம் |



| | |
|---|---|
| திப்பிலி | அத்திபிஞ்சி |
| முத்து | பருத்திப்பிஞ்சு |

இவைகளை ஓர் நிறையா யறைத்து ஆவின் நெய்யிற்போட்டுக் காய்ச்சி மூன்று நாள் விழியிற்கட்டி. அப்பால், நெல்லிப்பருப்பை முலைப்பாலில் அறைத்து புறவளையமிடக் கண் விதனம் மாறும். அல்லது,

### வேறு முறை

கிளிஞ்சல்நீர் - பனைமட்டைச்சாறு - இளநீர் வகைக்குப் படி மாகாணி, ஆவின் பால் - நெய் வகைக்குப் படி மூன்று மாகாணி ஒன்றாய்க் கலந்ததில் குங்குமப்பூ - தாமரைக்கிழங்கு - சந்தனம் வகைக்குப் பணவெடை - 2, செங்கழுநீர்க்கிழங்கு பணவெடை - 1, நற்சீரகம் பணவெடை காலே அரைக்கால், அதிமதுரம் - கோரோசனை வகைக்கு பணவெடை - ½ இவைகளை அறைத்துப் போட்டு காய்ச்சி வடித்து கண்ணில் கட்டினாலும், ஆவின் நெய்யும் பாலும் வகைக்குப் படி - 1 ஒன்றாய்க் கலந்ததில், சிறுகீரைவேர் - அதிமதுரம் - செஞ்சந்தனம் - நெய்தற்கிழங்கு இவைகள் வகைக்குப் பலம் - 1 அறைத்துப் போட்டு காய்ச்சி வடித்து விழியிற் கட்டினாலும் கண் சிவப்பு, கடுப்பு, காந்தல் முதலான ரோகங்கள் போகும். அல்லது,

### வேறு முறை

ஆவின் பால் - நெய் - முருங்கைப்பூச்சாறு - உத்தமதாளிச்சாறு வகைக்குப் படி - ¼, மஞ்சள் - அதிமதுரம் - சந்தனம் - சீரகம் - ஏலம் இவைகளை அறைத்துப்போட்டு காய்ச்சி வடித்து விழியிற் கட்டிவரச் சுக்கிரன் போகும்.

### வேறு முறை

முடக்கொத்தான் சமூலத்தை ஆவின்பால் விட்டு இடித்துப் பிழிந்த சாறு படி-1, நெய் படி-¼ ஒன்றாய் கலந்ததில் அதிமதுரம் பலம்-1 அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்துக் கண்ணிற் கட்டிவர படலகாசம், திமிர், அத்திகோபம் நிவர்த்தியாகும். அல்லது,

### வேறு முறை

இளநீர் - ஆவின் நெய் வகைக்குப் படி-¼ ஒன்றாய்க் கலந்ததில், நன்னாரி - இருவேலி நெய்தற்கிழங்கு - சந்தனம் - மஞ்சிட்டு வகைக்கு விராகன்-1 அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து விழியிற் கட்டிவரக் கண்ணின் புண், சீழ்வடிதல் மாறும்.

---

## கண் ரோகமுடையவர்களுக்குத் தலைக்கு பதமிடக் குங்குமப்பூ தைலம்

| | |
|---|---|
| குங்குமப்பூ | விலாமிச்சம்வேர் |
| மஞ்சிட்டி | ஆலம்விழுது |
| சந்தனம் | அதிமதுரம் |
| அரத்தை | தாமரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | நீர்வள்ளிக்கிழங்கு |

இவைகள் பச்சையாக எடுத்து இடித்து 8-படி தண்ணீரில் போட்டு 1-படியாய் வற்றவைத்திறுத்து அதில் நல்லெண்ணெய் படி-1 கூடவிட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து தலைக்கு பதமிட்டுவர குணமாகும்.

---



## கண் ரோகமுடையவர்களுக்கு காலில் தேய்க்கத் தைலம்

சின்னிச்சாறு - நல்லெண்ணெய் வகைக்கு படி-1, ஒன்றாய்க் கலந்து அதில் நாபிக்கிழங்கு விராகனெடை-1 சிதைத்துப் போட்டு காலில் தேய்த்து வர நன்மை யுண்டாகும்.

---

## விழியில் வியாதி வராமலிருப்பதற்கும், குளிர்ச்சிக்கும் வெண்ணெய்

சிற்றாமணக்கின் வேரை அரைத்து ஆவின் பாலில் கலக்கி காய்ச்சி புரைகுத்தி கடைந்து வெண்ணெய் எடுத்து விழியில் தீட்டிவர நன்மை உண்டாகும்.

---

## விழிநோய்கட்கு மருந்தரைக்கும் பாத்திரம்

வெங்கலக் கலவமாயும், செப்புக் குழவியுமாயும் இருக்கவேண்டும். அதில் அரைத்தால் உத்தமம்.

மேற்காட்டிய விழிரோக மருந்துகள் அனைத்தும் இந்தக் கல்வத்தில் அரைக்கவேணுமே யல்லாது, மற்றொன்றிலும் அரைக்கலாகாது.

### அனுபானம்

காலையில் போடவேண்டிய மருந்தை இரவிலும், மாலையில் போடவேண்டிய மருந்தை காலையிலும்

அதற்குறிய அனுபானங்களில் வெள்ளிக் கிண்ணத்தில் உறைத்து விழியில் தீட்டவும்.

---

### விழியில் மருந்திடப் பொருந்தாக் காலம்

மேற்படி ரோகஸ்தர்கள் நெடுந்தூரம் வெய்யிலில் நடந்து அலுத்திருக்கும்போதும், லாகிரி வஸ்துக்களை புசித்திருக்கும்போதும், எண்ணெய் தேய்த்துக் கொண்ட தினத்திலும், கண் வலியுள்ள தினத்திலும் விழியில் மருந்திடக்கூடாது.

---

### விழியில் மருந்தெழுதிய பின் நடக்கவேண்டிய கிரமம்

காற்று - வெய்யில் - லாகிரி வஸ்துக்கள் - குளிர்ந்த தண்ணீர் - கைப்பு - புளிப்பு - கரப்பன் பதார்த்தம் இவைகளை நீக்கி, வெந்நீர் - ஆவின் பால் - நெய் - துவரை - பாசிப்பயறு - சிறுகீரை - பொன்னாங்காணி - முருங்கைக்கீரை - வாழைக்கச்சல் இவைகளை அனுசரித்து வந்தால் நன்மை உண்டாகும்.

---

### தந்தசுத்தி

ஆலம்விழுது - புலா - நாவுருவி - வெள்ளெருக்கு - உகா இவைகளின் வேர், வேம்பு இக் குச்சிகளில் ஒன்றினால் தந்தசுத்தி செய்து வெந்நீரில் முகம் கழுவி வந்தால் நன்று.

---



### தைலம் தேய்த்துக்கொள்ளும் கிரமம்

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணியில் 1 - கடிகை வரையிலும், மார்கழி, தையில் 2 - கடிகை வரையிலும், மாசி, பங்குனி மற்ற மாதங்களில் 3 - கடிகை வரையிலும் சிரசில் தைலம் ஊறினபின் வெந்நீரில் உசிலிலை, சீக்காய் முதலானது அரைப்பிட்டு ஸ்நானஞ் செய்துவருவது கிரமம்.

---

### கண் ரோகங்களுக்குத் தைலம்

| | |
|---|---|
| சிறுகீரை | அமுக்கரா |
| பொன்னாங்காணி | சீந்தில் |
| எலுமிச்சை | வெட்டிவேர் |
| நன்னாரி | விலாமிச்சவேர் |
| நந்தியாவட்டம் | தாமரை |
| ஷாதாமடக்கி | நொய்தல் |
| சங்கங்குப்பி | கரந்தை |
| முடக்கொத்தான் | சவுரி |
| பொன்முசுட்டை | பேராமுட்டி |
| நொச்சி | ஆலம்வேர் |
| கரந்தை | வேப்பீர்க்கு |
| கறுத்தகாக்கனான் | |

இவைகளின் வேர் வகைக்குப் பலம் - 3, அதிமதுரம் - தேவதாரம் - தான்றிக்காய் - முத்தக்காசு வகைக்குப் பலம் - 3, சந்தனம் பலம் - 8, சிற்றாமுட்டி வேர் பலம் - 15, மிளகு பலம் - 5 இவைகளை இடித்து 32 - படி சுத்த ஜலத்திற் போட்டு தீபம்போல் எரித்து எட்டொன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய்

படி - 6, ஆவின்பால் படி-4, பசும்நெய் படி - 2, செவ்விளநீர் படி - 1, முடக்கொத்தான் - பொன்முசுட்டை - கொச்சி - பொன்னாங்காணி - கரிசலாங்கண்ணி - சீந்தில்தண்டு - கற்றாழை - தண்ணீர்விட்டான் - வாதமடக்கி இவைகளின் சாறு வகைக்குப் படி - 1 ஒன்றாய் விட்டு, நாக்கணம் - பூலாக்கிழங்கு - லவங்கபத்திரி - சந்தனம் - தேவதாரம் - மந்திஷ்டிவேர் - வால்மிளகு - சடாமாஞ்சில் - ஏலம் - சாதிக்காய் - கிராம்பு - கோஷ்டம் - வெட்டிவேர் - அஞ்சனக்கல் - விலாமிச்சம்வேர் - மரமஞ்சள் - கொத்தமல்லிருக்கல் - அதிமதுரம் - செவியம் - சண்பகப்பூ - லவங்கப்பட்டை - தக்கோலம் - சதகுப்பை - நெல்லிமுள்ளரி - திப்பிலி - கடுகுரோகணி - சிறுநாகப்பூ - தேசாவரம் - பச்சை வகைக்கு கழஞ்சு-3 ஆவின் பாலில் அரைத்துப் போட்டு, சிறு தீயாய் எரித்து மெழுகு பதத்தில் வடித்து, அதின் சூடாறுமுன் அபின் - புனுகு - சவுக்காரம் - கோரோசனை - கஸ்தூரி - பச்சைச் சூடம் வகைக்குக் கழஞ்சு - 1 பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு, ஒன்றுவிட்டு ஒரு நாள் தைலம் தேய்த்து சீக்காய் அரைப்பிட்டு முழுகிவர, நயனகாசம் - படலம் - பில்லம் - திமிர் - புழுவெட்டு - பித்தம் - பூ - குருடு - நீர்ப்பாச்சல் - குந்தம் முதலாகிய கண்ணோய் 96 - ம் நிவர்த்தியாகும்.

வேறு முறை

நெல்லிக்காய் - கையாந்தகரை இவைகளின் சாறு, பசுவின் பால் வகைக்குப் படி - 3, நல்லெண்ணெய் படி - 4, அதிமதுரம் - கோஷ்டம் - ஏலம் - லவங்கம் - சண்பகமலர் - சந்தனம் - வெட்டிவேர் - விலாமிச்சம் வேர் வகைக்குப் பலம் - 1 அரைத்துப் போட்டுக்



காய்ச்சி முழுகிவர, கண்காசம் - படலம் - புகைச்சல் பித்தம் முதலியவை நிவர்த்தியாகும். அல்லது,

வேறு முறை

நெல்லிக்காய் - கையாந்தகரை வகைக்குச் சாறு படி - 2, நல்லெண்ணெய் - ஆவின் பால் வகைக்குப் படி - 1 இவைகளை ஒன்றாய்க் கலந்ததில், அதிமதுரம் பலம் - 1 அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவர, கண்படலம் - கண்ணெரிவு - கபாலவரட்சி முதலியவை நிவர்த்தியாகும்.

வேறு முறை

நல்லெண்ணெய் - கருஞ்செம்பையிலைச் சாறு வகைக்குப் படி - 1, முலைப்பால் படி - ½ ஒன்றாய்க் கலந்ததில் மிளகு பலம் - 1, வால்மிளகு - உள்ளி - வசம்பு வகைக்குப் பலம் - ¼ இவைகளை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து முழுகிவர, நேத்திரவாயு நிவர்த்தியாகும். அல்லது,

வேறு முறை

கையாந்தகரை - பொன்னாங்காணி - முசுமுசுக்கை - தாழைவிழுது இவைகள் சாறு - நல்லெண்ணெய் - முலைப்பால் - செவ்விளநீர் வகைக்குப் படி - 1 ஒன்றாய்க் கலந்து மூன்றுநாள் வெய்யிலில் வைத்து அதில் சந்தனம் - அதிமதுரம் - விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் - செங்கழுநீர்க்கிழங்கு - கோஷ்டம் வகைக்கு கழஞ்சு - 1, கிராம்பு பணவெடை - 5, குங்குமப்பூ பணவெடை - 2 இவைகளை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி முழுகிவர, கண்புகைச்சல் - பித்தகாசம் - தலைமயக்கம் முதலியவை குணமாகும்.

## வேறு முறை

சிறுகீரை, கரிப்பான் இலைகளின் சாறு - நல்லெண்ணெய் - பசுவின் பால் - எலுமிச்சம்பழச் சாறு வகைக்குப் படி - 1 ஒன்றாய்க் கலந்து அதில் கோஷ்டம் - நெல்லிமுள்ளி - அதிமதுரம் - ஏலம் - லவங்கம் - வெட்டிவேர் - விளாமிச்சம்வேர் வகைக்கு விராகனெடை - 1 அரைத்துக் கலக்கிக் காய்ச்சி முழுகிவர, பித்தகாசம் - மாலைகாசம் - வரட்சி முதலியது தீரும்.

## வேறு முறை

சிறுகீரை - பொன்னாங்காணி - வல்லாரை - முசுமுசுக்கை - நெல்லிக்காய் இவைகளின் சாறு, நல்லெண்ணெய் - ஆவின்பால் - இளநீர் வகைக்குப் படி-2 இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் இஞ்சி பலம் - 3, வெட்டிவேர் - தண்ணீர்விட்டான்கிழங்கு வகைக்குப் பலம் - 1, தாமரைக்கிழங்கு பலம் - 3, மல்லி பலம் - 2, சீரகம் - வாய்விளங்கம் வகைக்குப் பலம் - ¼ இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்துக் கலக்கி வெய்யிலில் இரண்டு நாள் வைத்துக் காய்ச்சி வடித்து அதில் பஞ்சதிரவியம் வகைக்கு விராகனெடை - 2 பொடித்துச் சீலையில் முடிந்து போட்டுகொண்டு, தலைமுழுகிவர விழிகண்குருடு - நீலகாசம் - பித்தகாசம் முதலியவை தீரும்.

## வேறு முறை

| | |
|---|---|
| வெட்டிவேர் | நெல்லிமுள்ளி |
| விளாமிச்சம்வேர் | மரமஞ்சள் |
| முத்தக்காசு | சந்தனம் |
| நன்னாரிவேர் | மகிழம்பூ |



வகைக்குப் பலம் - 1 இவைகளை இடித்துப் பதக்குத் தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி அதில், பச்சைகச்சோலம் - நன்னாரி - வெட்டிவேர் - விலாமிச்சம்வேர் - கோஷ்டம் - சந்தனம் - இலுப்பைப்பூ - சதகுப்பை - குங்குமப்பூ - சடாமாஞ்சில் - வெள்ளைக் குங்கிலியம் - மகரமலர் - புனுகு - நெய்தற்கிழங்கு - சாதிக்காய் - ஏலம் - முத்தக்காசு - விளாவரிசி - தாமரைக்கிழங்கு - கடுகு - செவியம் - தான்றி - அஞ்சனக்கல் - அதிவிடையம் - அதிமதுரம் - சண்பக மலர் - மஞ்சிட்டி வகைக்குக் கழஞ்சு - 1 இவைகளை அரைத்துப் போட்டு நல்லெண்ணெய் நாழி - 1 கூட விட்டுப் பதமாய்க் காய்ச்சி யிறுத்து முழுகிவர, தலைமயக்கம் - உடம்பெரிவு - காலை மாலை மதிமயக்கம் - கண்திமிர் - எரிவு - படலம் - காசம் - விழிகண்பூ - சதை வளர்த்தி - நீலகாசம் - நரைதிரை யாவும் நீங்கும்.

## வேறு முறை

| | |
|---|---|
| சிற்றாமுட்டிவேர் | நன்னாரிவேர் |
| வில்வவேர் | சிந்தில்தண்டு |
| வெட்டிவேர் | சந்தனம் |
| விலாமிச்சம்வேர் | அமுக்கிறாகிழங்கு |

இவைகள் வகைக்குப் பலம் - 3 இடித்து 16 - படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் கிஷாயஞ் செய்து அதில், சிறுகீரை - கொடிப்பசலை - முசுமுசுக்கை - ஓரிலைத்தாமரை - தண்ணீர்விட்டான்கிழங்கு - வல்லாரை - சீரா - செங்கழுநீர் - கற்றாழை - தாழைவிழுது வகைக்குச் சாறு படி - ¼, நல்லெண்ணெய் - ஆவின்பால் - இளநீர் - நெல்லிச்சாறு வகைக்குப் படி - 1 கூட விட்டு, பஞ்சதிரவியம் - சிறுநாகமலர் - சீரகம் - கஸ்

தூரிமஞ்சள் - திரிகடுகு - திரிபலம் - சடாமாஞ்சில் - செவ்வுள்ளிக்கொடி - வெட்பாலையரிசி - பெருங்குரும்பைமல்லி - மகரப்பூ - தேவதாரம் - பச்சை - கிளிபூரப்பட்டை - கிச்சிலிக்கிழங்கு - பூஞ்சாந்துப்பட்டை வகைக்கு விராகனெடை - 2 இவைகளைப் பசுவின் பாலிலரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து அதில், புனுகுசட்டம் - கோரோசனை - பச்சைகற்பூரம் - குங்குமப்பூ வகைக்கு விராகனெடை - 1 பொடித்துப் போட்டுத் தலைமுழுகிவர கண் ரோகங்கள் தீரும்.

வேறு முறை

| | |
|---|---|
| நெல்லிக்காய் | கற்றாழை |
| முசுமுசுக்கை | சிறுகீரை |
| இளநீர் | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| கரிசலாங்கண்ணி | வல்லாரை |

இவைகளின் சாறு வகைக்குப் படி - 4, பசுவின் பால் - நல்லெண்ணெய் வகைக்குப் படி - 8, சிற்றாமணக்கெண்ணெய் - ஆவின் நெய் வகைக்குப் படி - 2 இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம் - அதிமதுரம் - கோஷ்டம் - மஞ்சிட்டி - நன்னாரிவேர் - விலாமிச்சம்வேர் - லவங்கப்பட்டை - லவங்கப்பத்திரி - சண்பகமலர் வகைக்குப் பலம் - ¼, தாளிசபத்திரி பலம் - 1, சந்தனம் பலம் - 2, கோரோசனை பலம் - ¼, பச்சை கூடம் பலம் - ⅛ இவைகளை இளநீர் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து தானியப் புடம்வைத்து முழுகிவர, உட்சுரம் - பித்தம் - தினவு - கடிவிஷம் - கைகாலெரிவு - திமிர் - கண்காசம் - படலம் - நேத்திர வாயு முதலானவைகளும் நிவர்த்தியாகும்.



வேறு முறை

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | சிற்றாமுட்டி |
| ஆவின் பால் | பொன்னாங்காணி |
| நல்லெண்ணெய் | பேராமுட்டி |
| இளநீர் | சிறுசெங்கழுநீர் |
| வகைக்கு படி-2, | இருவேலி |
| நன்னாரி | ஒரிலைத்தாமரை |
| சீந்தில் | வகைக்கு பலம் - 1 |
| முத்தக்காசு | |

இவைகளை யிடித்து 10 - படி தண்ணீரில் போட்டு 2 - படியாய் வற்றவைத்து அதில் நற்சீரகம் - செஞ்சந்தனம் - வசுவாசி - திரிகடுகு - கிராம்பு - ஏலம் - மதுரம் - லவங்கப்பட்டை - சாதிக்காய் - கோஷ்டம் வகைக்குக் கழஞ்சு - 2 அரைத்துப் போட்டு ஒன்றாய்க் கலந்து காய்ச்சி முழுக, பித்தவரட்சி - நாவரட்சி - பிரமேகம் - அவயவங்களெரிவு - உஷ்ணம் - கண்ணீர்ப் பாச்சல் - தலைவலி முதலியவை நிவர்த்தியாகும்.

வேறு முறை

10 - படி தண்ணீரில் ¼ - வீசை சந்தனத்தூளைப் போட்டு ஐந்து தினம் ஊறவைத்து 2 - படியாய் வற்றவைத்து, விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் - நன்னாரிவேர் - பொன்னாங்காணி - சிற்றாமுட்டி - சீந்தில் - வில்வம் இவைகள் வேர் வகைக்குப் பலம் - 1 இடித்து இருதூணி நீரில்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து இருவகைக் கஷாயத்தையும் ஒன்றாய்க் கலந்து அதில், மரமஞ்சள் - மஞ்சிட்டி - மாஞ்சில் - மல்லி - செவ்வள்ளிக்கொடி - செவியம் - விளாவரிசி - சதகுப்பை - வெட்பாலையரிசி - பச்சை - திப்பிலி - கச்சோலம் - தகரம் -

புனுகு - சந்தனம் வகைக்குக் கழஞ்சு - 4 இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்கு சாப்பிட்டுத் தலைக்குத் தேய்த்து முழுகிவர, மேற் சொல்லிய ரோகங்கள் நிவர்த்தியாகும்.

வேறு முறை

தாமரைக்கிழங்கு - நெல்லிமுள்ளி - ஆம்பற்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு - நெய்தற்கிழங்கு வகைக்கு பலம் - 10 இவைகளை இடித்துலர்த்தி 10 - படி தண்ணீரில் போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து, அதில் ஒரு படி நல்லெண்ணெய்விட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர, கண்ணோய்கள் நிவர்த்தியாகும்.

வேறு முறை

| | |
|---|---|
| நெல்லிக்காய் | பேய்ப்புடல் |
| கரிப்பான் | கோவையிலை |
| தாமரைக்கிழங்கு | எலுமிச்சம்பழம் |
| பொன்னாங்காணி | இவைகள் சாறு |

பசுவின் பால் வகைக்குப் படி-½, நல்லெண்ணெய் படி - 1, அதிமதுரம் - தேவதாரம் - நாகணம் - கோஷ்டம் - ஏலம் - முந்திரிப்பழம் - பேரீச்சம்பழம் - சந்தனம் - ஜாதிக்காய் வகைக்கு விராகனெடை - 2 இவைகளை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து மூன்று நாழிகை வரையில் தலையில் தேய்த்து உச்சியில் அறைப்பிட்டு ஸ்நானஞ் செய்துவர, எட்டுவகை காசமும் தீரும்.

வேறு முறை

| | |
|---|---|
| குமரி | சீராசெங்கழுநீர் |
| சீந்தில் | தாமரைக்கிழங்கு |
| சிற்றாமுட்டி | நன்னாரி |



| | |
|---|---|
| சிறுகீரை | விலாமிச்சம்வேர் |
| பொன்னாங்காணி | இவைகள் சாறு |

வகைக்குப் படி - 4, கருவேம்பட்டை பலம் - 20, [தண்]ணீர் படி - 2 விட்டுக் கலந்து அதில், அதிமதுரம் - காஷ்டம் - சதகுப்பை - சன்னலவங்கப்பட்டை - சந்[த]ரம் - பச்சைச்சூடம் - சாதிக்காய் - செவ்வள்ளிக்[]காடி - ஏலம் - பச்சைத்திப்பிலி மூலம் - மல்லி - [க]ாலுளுவை - செஞ்சந்தனம் - முத்தக்காசு - சடாமாஞ்சில் - கோரோசனை வகைக்குக் கழஞ்சு - 2 இவைகளை அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி முழுகிவர, [நே]த்திரநோய் 96 - ம் தலைவலியும் தீரும்.

வேறு முறை

| | |
|---|---|
| பேய்வாழை | பாதிரி |
| வெள்ளறுகு | நாய்வேளை |
| பிரமியம் | தகரை |
| பொன்முசுட்டை | நெல்லிமுள்ளி |

இவைகள் வகைக்குப் பலம்-1 வீதம் இடித்து படி தண்ணீரில் போட்டு வற்றவைத்திருந்த கியாழம் படி - 1, ஆவின் நெய் படி - 1 ஒன்றாய்க் கலந்ததில் [மி]ளகு - சுக்கு - அரத்தை - சிறுதேக்கு - மலைதாங்கி [வே]ர் - மரமஞ்சள் - தான்றிக்காய் - மதுரம் - பூமிசர்க்[க]ரைக்கிழங்கு வகைக்கு விராகனெடை - 3 ஆவின் [பா]லில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகி திமிர்காசம் தீரும்.

வேறு முறை

| | |
|---|---|
| காத்தொட்டி | பச்சைமஞ்சள் |
| வெற்றிலை | கஞ்சா |

இவைகளின் சாறு வகைக்குப் படி - ½, ஆவின் பால் - நல்லெண்ணெய் வகைக்குப் படி - 2, மிளகு - கருஞ்சீரகம் - கோஷ்டம் வகைக்குக் கழஞ்சு - 1 அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து முழுகிவர, விழியில் நீர்வடிதல் - பில்லம் - பீனிசம் இவைகள் தீரும்.

## வேறு முறை

| | |
|---|---|
| சிற்றாமணக்கெண்ணெய் | ஏலம் |
| குமரிச்சாறு | புனுகுசட்டம் |
| வகைக்குப் படி - 1 | முத்தக்காசு |
| தேவதாரம் | சடாமாஞ்சில் |
| சந்தனம் | விலாமிச்சம்வேர் |
| பச்சைகற்பூரம் | லவங்கம் |
| சாதிபத்திரி | மஞ்சிட்டி |
| அதிமதுரம் | நன்னாரிவேர் |
| கடுகுரோகணி | தாமரைக்கிழங்கு |
| தக்கோலம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| மஞ்சள் | சிறுநாகப்பூ |
| சாதிக்காய் | திரிபலை |
| கிராம்பு | வகைக்கு கழஞ்சு - |

இவைகளை மேற்படி சாற்றி லரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவர நேத்திரநோய், சிரசுநோய் முதலியவைகள் நிவர்த்தியாகும்.

## வேறு முறை

| | |
|---|---|
| கற்றாழஞ்சோறு | படி - 2 |
| இளநீர் | ,, 1 |
| நல்லெண்ணெய் | ,, 3 |
| பசுவின் பால் | ,, 5 |



இவைகளைக் கலந்து மூன்று நாள் வெய்யிலில் வைத்து நாலிலொன்றாய்க் காய்ச்சி அதில், செங்கழுநீர்க்கிழங்கு - ஏலம் - லவங்கம் - பச்சை - சந்தனம் - விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் - இலுப்பைப்பூ - கோஷ்டம் - வெள்ளைக்குங்கிலியம் - சிறுநாகப்பூ - நறும்பிசின் - மாஞ்சில் - அதிமதுரம் - அரேணுகம் - மரமஞ்சள் - தகரம் - புன்னைத்தாது - தாமரைவளையம் - ஞாழல்தாது - கொட்டிக்கிழங்கு - நன்னாரி - முத்தக்காசு வகைக்குக் கழஞ்சு - 3 இவைகளை அரைத்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவர, கண்ணழற்றி - சிவப்பு - நீர்ப்பாச்சல் முதலிய பற்பல ரோகங்களும் தீரும்.

## வேறு முறை

சந்தனத்தூள் - விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் - முத்தக்காசு - அதிமதுரம் - ஏலம் - லவங்கம் - இந்துப்பு - கார்கோலரிசி வகைக்கு பலம் - 1 இவைகளை யிடித்து துணி நீரில்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் படி - 3, ஆவின் பால் படி - 6, பச்சைச்சோளம் - வெட்டிவேர் - விலாமிச்சம்வேர் - அதிமதுரம் - ஏலம் - லவங்கம் - சிறுநாகப்பூ - நன்னாரிவேர் - குங்குமப்பூ - மரமஞ்சள் - செங்கழுநீர்க்கிழங்கு - சண்பகப்பூ - சந்தனம் - செவ்வள்ளிக்கொடி - கோஷ்டம் வகைக்குக் கழஞ்சு - 3 இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் குங்குமப்பூ - புனுகு - பச்சைகற்பூரம் வகைக்கு விராகனெடை - 1 பொடித்துப் போட்டுத் தலை முழுகிவர, பன்னகாசம் - படலம் - பற்பரோகம் - புகைச்சல் - நீர்ப்பாச்சல் - தலைநோய் - கன்னச்சூலை முதலியவை தீரும்.

### வேறு முறை

| | |
|---|---|
| ஏலம் | கடுகுரோகணி |
| லவங்கம் | சிறுநாகப்பூ |
| சாதிக்காய் | அதிமதுரம் |
| நெல்லி | கடுக்காய் |
| தான்றிக்காய் | சதகுப்பை |
| கோஷ்டம் | சண்பகப்பூ |
| கஸ்தூரிமஞ்சள் | பச்சை |
| கருவாப்பட்டை | வெள்ளைக்குங்கிலியம் |
| செஞ்சந்தனம் | குருந்தொட்டிவேர் |

வகைக்குப் பலம் - 3

இவைகளை யெல்லாம் இடித்து 24 - படி தண்ணீரில் போட்டு எட்டொன்ருய் வற்றவைத்து பொன்னுங்காணிவேர் - வெட்டிவேர் - விலாமிச்சம்வேர் - மிளகு வகைக்குப் பலம் - 3 இவைகளை யிடித்துத் தனித்தனி 4 - படி தண்ணீரிற் போட்டு எட்டொன்ருய் வற்ற வைத்து வடித்து நீரைப் போக்கிவிட்டு, இளநீர் - தாழைவிழுதுச்சாறு வகைக்குப் படி - 2, நல்லெண்ணெய் - ஆவின் பால் வகைக்குப் படி - 3 ஒன்ருய்க் கலந்து ஷை நாலுவகை மருந்தும் பசும்பால் விட்டு மெழுகுபதமாய் அறைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகி வர, விழிநீர்ப்பாச்சல் - இமைதடிப்பு - பற்பரோகம் முதலான நோய்கள் தீரும்.

### வேறு முறை

நல்லெண்ணெய் - இளநீர் - ஆவின்பால் வகைக்குப் படி - 1, சிறுகீரை - கையாந்தகரை - பொன்னுங்காணி - நெல்லிக்காய் இவைகளின் சாறு வகைக்குப்



படி - ½, வெட்பாலையரிசி - கஸ்தூரி மஞ்சள் - பஞ்ச திரவியம் வகைக்குப் பலம் - ½ இவைகளை அறைத்துக் காய்ச்சி முழுகிவர, விழிஎரிவு - கடுப்பு - காசம் முதலானவைகள் நிவர்த்தியாகும்.

---

### அவயவங்களின் எரிவிற்கும் பித்தத்திற்கும் தைலம்

| | |
|---|---|
| சிற்றாமுட்டி | சீந்தில்தண்டு |
| நன்னாரி | சீராசெங்கழுநீர் |
| இருவேலி | தாமரைக்கிழங்கு |
| முன்னை | தண்ணீர்விட்டான் |
| நெய்தல் | சிறுகீரைவேர் |

இவைகளின் வேர் வகைக்குப் பலம் - 1 இடித்து 8 - மரக்கால் தண்ணீரில் போட்டு எட்டொன்ருய்க் காய்ச்சி வடித்து அதில், தாழைவிழுது - தாமரைக்கிழங்கு - பொன்னுங்காணி - கையாந்தகரை - ஓரிலைத் தாமரை - நெல்லிக்காய் - எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு வகைக்குப் படி - 2, நல்லெண்ணெய் - ஆவின் பால் வகைக்குப் படி - 6 இவைகளையெல்லாம் ஒன்ருய் கலந்து அதில், பஞ்சதிரவியம் - கச்சை - கஸ்தூரிமஞ்சள் - சிறுநாகப்பூ - செவியம் - சடாமாஞ்சில் வகைக்கு பலம் - 1 இவைகளை இளநீர் விட்டறைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில், புனுகும் - பச்சைகற்பூரமும் பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு தலைமுழுகி வர, நிவர்த்தியாகும்.

---

## விழிகடுப்பு, தலைவலிக்குத் தைலம்

நல்லெண்ணெய் - குப்பைமேனி - கையாந்தகரை - ஆதண்டை - நொச்சி - கழற்கொடி இவைகளின் சாறு வகைக்குப் படி - 1, பின்னும் கையாந்தகரைச் சாற்றில் சர்க்கரையைக் கரைத்து வெய்யிலில் தெளியவைத்து அந்தத் தெளிவு ¼ - படி ஒன்ருய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து அதில், அபின் விராகனெடை - 1 பொடித்துப் போட்டுக்கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

---

## விழி ரோகங்களுக்கும் கபால குஷ்டத்திற்கும் குமரித் தைலம்

எட்டு படி குமரிச்சாற்றை ஒரு பாண்டத்தில் ஊற்றி ஒரு படியாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் படி - 1, சிறுநாகப்பூ - செங்கழுநீர்க்கிழங்கு - அதிமதுரம் - விலாமிச்சம்வேர் - நன்னரி - அஞ்சனக்கல் - சந்தனம் வகைக்குக் கழஞ்சு - 3, ஆவின் பால் விட்டரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவரத் தீரும்.

---

## கபாலவலி, கபாலஜன்னி, கண்ணோய்கட்கு சம்பீரத் தைலம்

தேங்காய்ப்பால் - பசுவின்பால் வகைக்குப் படி - 2 எலுமிச்சம்பழச்சாறு - முலைப்பால் வகைக்குப் படி - 3 ஒன்ருய்க் கலந்து அதில், ஏலம் - லவங்கம் - நற்சீரகம் - [illegible]க்கு - கோஷ்டம் - சண்பகப்பூ வகைக்குக் கழஞ்சு - 1 [illegible]றைத்து, மிளகு - அதிமதுரம் - சதகுப்பை - மயிரோசனை - குருந்து - ஈசுரமூலி - முப்புரமெரித்தான் பெருங்குரும்பை வகைக்குக் கழஞ்சு - 3 இவைகளை அரைத்துப்போட்டு உமிக்காந்தலில் மூன்று நாள் வைத்திருந்து காய்ச்சி முழுகிவரத் தீரும்.



---

## கண்ணோய், செவிநோய், தலைநோய்கட்குத் தைலம்

கையாந்தகரை - கற்ருழை - நெல்லிக்காய் இவைகளின் சாறு - முலைப்பால் வகைக்குப் படி - 1, நல்லெண்ணெய் படி - 1, விலாமிச்சவேர் - கோஷ்டம் - அதிமதுரம் - சந்தனம் வகைக்குப் பலம் - 1 இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

---

## விழிநோய், சிரசுநோய்கட்கு கற்பூர சந்தனாதித் தைலம்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | தாழைவிழுது |
| பசுவின்பால் | முசுமுசுக்கை |
| இளநீர் | கற்பூரவல்லி |
| கற்ருழை | எலுமிச்சம்பழம் |

இவைகளின் சாறு வகைக்குப் படி - 1, விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் - ஏலம் - ஓமம் - குங்குமப்பூ - கிராம்பு - சீரகம் - மல்லி - தேவதாரம் - அரத்தை - மரமஞ்சள் - கிளியூரம்பட்டை - தான்றிக்காய் - கற்கடகசிங்கம் - சிறுநாகப்பூ - சண்பகப்பூ - கஸ்தூரிமஞ்சள் - வெட்பாலையரிசி - விளாவரிசி - சிறுதேக்கு - பூலாக்

கிழங்கு - பச்சை - வாளுழுவையரிசி - மிளகு வகைக்கு கழஞ்சு - 1 இவைகளையெல்லாம் எலுமிச்சம்பழச்சாற்றால் அறைத்துப் போட்டு காய்ச்சி முழுகிவர, மூக்கின் நீர்ப்பாய்சல் - சீழ்வடிதல் - நாசிகனத்து மண்டையைக் குத்துதல் - ஒருதலைவலி - கபாலயிடி முதலான சிரசு நோய் 40 ம், விழி நோய் 96-ம் நிவர்த்தியாகும்.

---

## பித்தம், விழி, காதடைப்பு, மந்தத்திற்கு தைலம்

கையாந்தகரை - நெல்லிக்காய் - நொச்சி - ஆதண்டை இவைகளின் சாறு - நல்லெண்ணெய் - பசுவின் பால் வகைக்குப் படி - 1¼, அதிமதுரம் கழஞ்சு - 2 அறைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகி வரத் தீரும்.

---

## நேத்திர நோய் தொண்ணூற்றாறுக்கும் தைலம்

பொன்னாங்காணி - சிறுகீரை - ஆவாரைமொட்டு - கொழுந்து இவைகளை ஆவின்பால் விட்டு இடித்துப் பிழிந்த சாறு - சிற்றாமணக்கெண்ணெய் - ஆவின் நெய் - நல்லெண்ணெய் வகைக்குப் படி - 1, ஆவின் பால் படி-1 ஒன்றாய்க் கலந்து அதில், ஏலம் - கிராம்பு - அதிமதுரம் - கோஷ்டம் - சண்பகப்பூ - ஜாதிக்காய் - மிளகு - வால்மிளகு - மலர்க்காய் - சந்தனம் - செஞ்சந்தனம் - மரமஞ்சள் - அரத்தை - தேவதாரம் - சாத்திரபேதி - வெட்டிவேர் வகைக்குப் பலம் - ¼ பொடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒன்றுவிட்டு



ஒரு நாள் த... த் தேய்த்துச் சீக்காய் - உசிலியை அறைப்பிட்டு ஸ்நானஞ் செய்துவரச் சகல கண் ரோகங்களும் நிவர்த்தியாகும்.

---

## விழிநோய், சிரசு நோய்களுக்கு தைலம்

தாழைவிழுதுச்சாறு - நெல்லிக்காய்ச்சாறு - கரிசலாங்கண்ணிச்சாறு - சீந்திற்சாறு வகைக்கு படி - 8, நல்லெண்ணெய் படி - 16 இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் இலுப்பைப்பூ - சந்தனம் - அதிமதுரம் - ஏலம் - லவங்கம் - லவங்கப்பத்திரி - நாகேசுரம் - வெட்டிவேர் - மூத்தக்காசு - சாதிக்காய் - பேரீச்சம்பழம் - கொத்தமல்லி - தேவதாரம் - விலாமிச்சவேர் - தாமரைக் கிழங்கு - செங்கழுநீர்க்கிழங்கு - ஆலம்விழுது - வில்வ... கீழ்க்காய்நெல்லிவேர் - மல்லி வகைக்குப் ...ம - 1 இவைகளையெல்லாம் இடித்துப் ப... பதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவர சகல ...களும் நிவர்த்தியாகும்.

---

தஞ்சாவூர் சமஸ்தானம்
சரபோஜி மகாராஜா அவர்கள் கையாண்டுவந்த

## இரத்தினாதி பாத்திரை

| | |
|---|---|
| மாணிக்கம் | மனோசிலை |
| நீலம் | யானைப்பல் |
| பச்சை | மாட்டுப்பல் |
| கோமேதகம் | எருமைப்பல் |
| புட்பராகம் | காட்டுப்பன்றிப்பல் |

| | |
|---|---|
| வைடூரியம் | ஆட்டு - யர் |
| தங்கம் | ஆமைஓயாடு |
| வெள்ளி | சங்கு |
| முத்து | நீலாஞ்சனம் |
| பவளம் | படிகாரம் |
| தாம்பிரம் | சுக்கு |
| காந்தம் | திப்பிலி |
| துத்தநாகம் | மிளகு |
| மான்கொம்பு | புங்கன்வித்து |

இவைகள் வகைக்கு 1 - விராகனெடையாக எடுத்து எலுமிச்சம்பழச் சாறுவிட்டு 30 - ஜாமம் அரைத்துக் கயிறுபோல் மாத்திரைசெய்து (அதாவது அரிசிதிப்பிலி போல் நீட்டுவசமாக மாத்திரைகள் செய்து) நிழலில் உலர்த்தி வெள்ளிச்சிமிளில் போட்டு வைக்கொண்டு, குற்றமற்ற பெண்களினது முலைப் பாலிலா... ப்பு மாதுளம்பழச் சாற்றிலாவது 1 அல்லது 2 - ...ருப் பிரமாணம் இழைத்துக் கண்களில் தீட்டிவ... ல், திமிரம் - அமரம் - காசம் - படலம் - வளர்த்தி - ...ர்ப்பாச்சல் - மஞ்சள் - இரத்தம் - வெளுமை முதலிய வியாதிகளும், தொந்தவியாதி முதலிய கண்ணோய் தொண்ணூற்றாறும் நிவர்த்தியாகும். இதற்குப் பத்தியம் : இச்சையென்கிற பெண் மயக்கம் ஒன்றுமாத்திரம் கண்டிப்பாய்க் கூடாது. சுபம்.

திருநேத்திர சிந்தாமணி முற்றிற்று.

---

திருமகள் விலாச அச்சு நிலையம், சென்னை: 1953.

...ல் ரூ. 5-0-0

கன்னூ... மிப்

அருமையான ...ரு ...க்கு ... தேக பஞ்சபூதம், ...ல்வெ... யாக ...ல் இதிலுள்ள ...ம், சூர்ணம், மாத் ..., நிருதாக்கியந்தை ... பற்பம், நீர், திரா... தஞ்சை வ... ...டம், ப... இன்னும் பல பாகங்களையும் முதல் பா... ...ர்தன்ன... இந்நூல் வைத்தியத் தொழிலைக் ...க்கும் வைத்தியர்களுக்கும் மற்ற ஏனை இரண்டா... ...தாத்தக்கது. வாலையந்திர படங்...

இக்கிரந்தமா... தஞ்சாவூர் வைத்திய சாலை ... விருத்தி செய்யுங் ...தில் ... தேர்ச்சியனுபவ...ங்களிற் சிறந்த பண்டிதர்களாகிய ...டிதர், சே...டிதர், வேங்கடபதி ஐயர், பாங்கிபேட்... வைத்தியர், ...பாலபிள்ளை, ஐயாகண்ணுபிள்ளை, சிதம்ப... ராமாராவ், ...ராவ் முதலிய பண்டித சிரோண்மணிகளை ...மது ராஜ...டும்பத்திற்கும், நகரவாசிகளுக்கும் உப... பொருட்டு ...ந்தக ஔஷதங்களை முடித்து கையாண்டு... போக முறை...களை மஹாராஷ்டிர பாஷையில் ஓலை ஏட்டுப் பி... எழுதி வைத்திருந்தவைகளை மேற்படி மகாராஜாவின் ...ஷிமா ...ரிய யோகாத ஆவாரே சாஹெப் ...வர்கள் தம் ...ணங்களை ...சில கிரந்தங்க... தக்க பண்டிதர்களைக்கொண்டு ...வ்வொரு ரோகங்களின் இற...ணி, பகாரமாய் அச்சிற் பதிப்பி... கூறப்பட்டுள்ள ரோக நி... ...ட்டர், முறையின் தலைப்பிலும் ...ம், பென்சல் ...ர்களின் பெயர் ...தக் கா... கைத்தொழில் முறை... ...த் தொழில் சகளையும் ... ...த்திய நூல்.

4-0-0

கிடைக்குமிடம்:— ...இத்தி...

செ. 5 ...வெங்க...